

# ஞானச்சுடர்

வைகாசி

மலர் 2008



ஓம்

முருகா

வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை**

பொருள்: கடவுளை வணங்காத தலைகள் தத்தமக்குரிய தொழில்களைச் செய்யாத உடல், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகளைப்போலப் பயனில்லாதனவாகும். (௯)

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

பொருள்: கடவுளை நினைப்பவர் பிறப்பு என்னும் பெரிய கடலைக் கடப்பர், நினையாதார் கடக்கமாட்டார். (10)



# நற்சிந்தனை

## நூதனமொன்றுமில்லை

## ஆசிரிய விருத்தம்

வழுத்துதற் கொன்று மில்லை மாரனை நெற்றிக் கண்ணாற்
கொளுத்திய குழகன் றன்னைக் கும்பிட்டுக் கூற்றை முன்னர்
விழுத்திய பரிசு கண்டே வேறொரு நினைப்பு மின்றி
வழுத்தியைந் தெழுத்தை நெஞ்சில் வஞ்சக மற்று வாழ்வீர் 5

## வெண்பா

அச்சம் ஒழியும் அவமிருத்துத் தானொழியும்
இச்சை யொழியும் இடுக்கணொடு – பச்சை மலை
உச்சியினின் றாறொழுகு மோங்கிலங்கை நன்னாட்டீர்
நித்தியரா மென்றுணர்வீர் நீர்.




வெளியீடு - 2 சுடர் - 125

# 2008 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பகுத்துண்டு பல்லுயிர்...... | கு. சோமசுந்தரம் | 1 - 2 |
| இந்து சமயமும் சமயக்.... | த. சுகந்தன் | 3 - 5 |
| ஆலய வழிபாடு | க. சிவசங்கரநாதன் | 6 - 8 |
| மனிதப் பிறவியின் மாண்பு | வி. விசாலாட்சி | 9 - 12 |
| மன அமைதியைப் பெற... | செல்வி சரவணமுத்து | 13 - 15 |
| தென்னை நாட்டுவோம் | ப. அருந்தவம் | 16 - 18 |
| இந்து வருடப்பிறப்பு | சி.மு. தம்பிராசா | 19 - 22 |
| வாழ்க்கை உன் கையில் | காரை எம்.பி. அருளானந்தன் | 23 - 24 |
| உலகப் புகழ்பெற்ற..... | மூ. சிவலிங்கம் | 25 - 29 |
| குருபக்தி | ஆர்.வீ. கந்தசாமி | 30 - 32 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ மகாலிங்கம் | 33 - 37 |
| இறப்பை எண்ணி | திருமதி சி. யோகேஸ்வரி | 38 - 40 |
| வைகாசிப் பெருவிழா | | 41 - 42 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 43 - 45 |
| ஆச்சிரமப் பணிகள் | | - 46 |
| உத்தரகோசமங்கை | வல்வையூர் அப்பாண்ணா | 47 - 48 |


**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**பதிவு இல. Q.D/60/NEWS/2008**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்
# சித்திரைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் வைகாசி மலர் வெளியீட்டினை Dr. V. பாலகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஆச்சிரமத்தினது பணிகள், செயற்பாடுகள்பற்றி விதந்து கூறியதோடு இம்மலர் பெரும் சிரமத்தின் மத்தியிலும் தொடர்ந்து மாதந்தவறாது வெளிவருவது சிறப்பிற்குரியது. இப்பணியை சாதாரணமாக யாரும் செய்யமுடியாது என்றும், 124ஆவது மலராக வெளிவரும் இம்மலரை நான் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைவதோடு, இவ் ஞானச்சுடர் வெளியீடுகள் யாவும் சந்நிதியானின் திருவருளின் துணையுடனேயே மேற்கொள்ளப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்கள்.

இச்சஞ்சிகையானது சைவ ஒழுங்கு, பண்பாடு, விழுமியக்கருத்துக்கள், ஆன்மீகக் கருத்துக்கள் நிறைந்த ஓர் இலட்சிய வடிவமாகத் திகழ்கின்றது.

இச்சந்நிதியானின் அற்புதத்தாலும் மகிமையினாலும் தொடர்ந்து வெளிவருவது மறுக்கமுடியாது. இதேபோல பல்லாண்டுகாலம் தொடர்ந்து தனது சேவையை ஆற்ற முருகப்பெருமான் அருள்புரிவார் எனக்கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவுசெய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

ஞானச்சுடர் வைகாசிமாத மலருக்கான மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரான திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஞானச்சுடரின் 124ஆவது சஞ்சிகையை மதிப்பீடு செய்ய எனக்குக் கிடைத்த சந்தர்ப்பமானது முருகனின் திருவருளே எனக் கூறினார்கள்.

தொடர்ந்தும் இம்மலரில் இடம்பெறும் நற்சிந்தனைகள், பொன்மொழிகள், கட்டுரைகள், கவிதைகள் யாவும் சைவ மக்களை வழிப்படுத்துகின்ற வகையிலும் அவர்களை ஈடேற்றுகின்ற வகையிலும் அமைந்துள்ளது என்பதையும் எடுத்துக்கூறி இம்மலரைப் பயன்படுத்த வேண்டியதும் அதன்மூலம் பயனடைய வேண்டியதும் சைவமக்கள் எல்லோரினதும் கடமையாகும் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

சந்நிதியானின் திருவருளின் மகிமையைக் கூறியதோடு இங்கு ஒவ்வொரு நாளும் நடைபெறும் அன்னதானப் பணிகளுடன் அறப்பணிகளையும் ஒருங்கே இணைத்து சிறப்பாக நடாத்தி வருகின்ற ஆச்சிரமத்திற்கும் சுவாமிகளுக்கும் நன்றி கூறியதுடன், சுடரில் இடம்பெற்ற கட்டுரைகள் ஒவ்வொன்றையும் சுருக்கமாக மதிப்பீடு செய்து தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

வாழ்க்கைச் சூழலும் மரபுவழித் தன்மையும் ஒருவனுடைய ஆளுமை உருவாக்கத்துக்கும் அவனுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கும் மிக முக்கியமான காரணங்களாக அமைகின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. நல்ல சூழலும் மரபுவழிப் பண்பும் உதவியாக அமையாதபோதுகூட ஒருவனுடைய சரியான சிந்தனைப்போக்கு, அவனுடைய ஆளுமையை உயர்த்தி அவனுடைய வாழ்க்கையையும் மேம்படுத்தும். இந்த உண்மை "எண்ணம்போல் இருப்பாய்" என்னும் முதுமொழியின்மூலம் உணரலாம். நல்ல சூழலும் தகுதியான மரபுவழிப் பண்பும் ஒருசேர அமைந்துவிட்டால் நல்லதுதான். சிலபேருக்கு நல்லசூழல் இருந்து நல்ல மரபுவழிப் பண்பு இல்லாமல் போகலாம். வேறு சிலருக்கு நல்ல மரபுவழிப்பண்பு இருந்து நல்ல சூழல் அமையாமல் போகலாம்.

இப்படி ஒன்று இருந்து ஒன்று இல்லாத நிலையில் ஒருவனுடைய வாழ்க்கை சிறப்படையுமா, சீரழியுமா என்பதை முன்கூட்டிச் சொல்லமுடியாது. எப்படிப்பட்ட சூழலிலும் தன்னுடைய நிலையிலிருந்து தாழாமல் தன்னுடைய ஆளுமையை உயர்த்தித் தன் வாழ்க்கையையும் ஒருவன் மேம்படுத்திக்கொள்ள நல்ல வழி இல்லாமல் இல்லை. நம் ஒவ்வொருவருடைய மனதிலும் நல்ல இயல்புகளும் உண்டு. தீய இயல்புகளும் உண்டு. தீய இயல்புகள் நம்முடைய மனதில் இல்லையென்றால் தீமைகளைப் புரிந்துகொள்ளவே முடியாது. நல்ல இயல்புகளுக்கு ஆட்பட்டுச் செயல்படுபவரை நல்லவர் என்கிறோம். தீய இயல்புகளுக்கு ஆட்பட்டுச் செல்பவரை தீயவர் என்கிறோம்.

நல்ல எண்ணங்கள் தோன்றும்போது முடிந்தால் அவற்றை உடனே செயற்படுத்திவிடவேண்டும். தீய எண்ணங்கள் தோன்றும்போது உடனே அவற்றைச் செயற்படுத்தாமல் தள்ளிப்போடப் பழகிக்கொண்டால்கூடப்போதும் தீய எண்ணங்கள் நம்மை ஆட்படுத்தமுடியாது. மனதைப் புரிந்துகொண்டு மனம்போன போக்கில் போகாமல் எது சரி, எது தவறு என்பதையும், நல்லது எது, தீயது எது என்பதையும் பகுத்தறிந்து உணர்ந்துகொண்டு சரியானதைத் தன்பக்கம் சார்ந்துநிற்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வினாடியும் விழிப்பாக இருந்து நல்ல மனத்தின் ஆட்சிக்கே நாம் இடங்கொடுத்துப் பழகிவிட்டால் நம்முடைய ஆளுமையும் உயர்வும், வாழ்வும் மேம்படும். இதனை நாமும் எமது வாழ்வில் நடைமுறைப்படுத்தி நம்மைச் சார்ந்த சமூகத்தினை மேம்படுத்துவோமாக.

உ

# அன்பின் அடியார்களே

நித்த நித்தம் உங்களுள்ளத்தை - விளங்கிட
நினைந்து சுத்த மாக்கிக் கொள்ளுங்கள்
முத்தனவனைச் சிக்கெனப் பிடித்தால் - அவனும்
விருந்தா யுங்கள் நெஞ்சை யகலான்
பக்தனாக மாறிநில்லுங்கள் - சந்நிதிபோய்ப்
பாலமுருகா என்று பணியுங்கள்
எத்தனையோ தூரமிருந்தாலும் - அவனை
எண்ணிவிட்டால் முன் குதிப்பானே.

மந்திரம்போ லிந்தப் பாமாலை - எண்ணியே
மனங் குளிர அவனைப் பாடுங்கள்
தந்திரமாய் ஆற்றுப்படை யோடு - அநுபூதியும்
அலங்காரம் புகழையும் பாடுங்கள்
சொந்தமாக்கி அவனைப் பணிந்தால் - நல்லவெல்லாம்
தோன்றாமல் தோற்றிக் குவிப்பான்
எந்தக்காரி யத்திலும் நினைத்தால் - சந்நிதியான்
ஏற்றமாக உங்களை வாழ வைப்பான்.

என்றுந்திரு விளையாடல் நடக்குமாம் - அதுவும்
ஏற்றவர்க்குத் தான் தெரியுமாம் - என
அன்று சொன்ன யோகர் வாசகம் - அதை
அனுபவத்தில் காணப் பாருங்கள்
இன்றெமது ஞானச் சுடரிலே - பார்த்து
ஈசன் முருகன் ஆடலை யெல்லாம்
நன்று காண்பீர் நாளும் காணலாம் - பெரிய
ஞானவான்கள் காணும் ஞானமே.

*முதுபெரும் புலவர்,*
*கலாபூஷணம், ஆசிரியர்*
*வை. க. சிற்றம்பலவனார் அவர்கள்.*

உ

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு P.T. பாலச்சந்திரன்**

(அவுஸ்திரேலியா)

**திரு கா. அருந்தவராசா**

(தொண்டைமானாறு)

**செல்வி சாரதாதேவி விஸ்வலிங்கம்**

(கெருடாவில் தெற்கு)

**திரு இ. கணேசலிங்கம்**

(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால் மேற்கு)

**திரு ஆ. குலேந்திரநாயகம்**

(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால்)

**கனம் தலைவர்**

(கலையரசி படிப்பகம் 3-ம் சந்தி, தொண்டைமானாறு)

**திரு வரதலிங்கம் செல்வமோகன்**

(மோகன்கடை ஆவரங்கால்)

**திரு சுப்பிரமணியம் கந்தையா**

(சிவன் வீதி (பலாலி) ஆவரங்கால்)

**திரு ச. கந்தசாமி**

(தேவன் ஸ்ரோர்ஸ் ஆவரங்கால்)

**திரு சி. ஞானசுந்தரம்**

(அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)

**திரு மா. சிவமூர்த்தி**

(வீடியோ கலாமினி அச்சுவேலி)

**திரு Dr வி. பாலகிருஷ்ணன்**

(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)

**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**

(பத்தமேனி)

**திரு மா. நாகலிங்கம்**

(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி)

**செல்வி இ. வல்லிபுரம்**

(இளை. ஆசிரியை நவக்கிரி)

**திரு வ.த. இன்பராசா**

(வல்வெட்டி)

**திரு க. கிருபாகரன்**

(சந்தைவீதி, உடுப்பிட்டி)

**திரு க. அரியரத்தினம்**

(கதிர் தொலைத்தொடர்பு நிலையம் வல்வெட்டி)

**அதிபர்**

(அ.த.க. பாடசாலை கம்பர்மலை)

**திரு கு. ரவீந்திரன் அதிபர்**

(தொண்டைமானாறு)

**திரு P. சாந்தரூபன் G.S**

(சாருகாந் தொலைத்தொடர்பகம், கெருடாவில் தெற்கு)

**திரு சி. தங்கவேல்**

(நிறுவனர் கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

**திரு சி. பஞ்சலிங்கம்**

(ஞான வைரவர் கோயிலடி உரும்பராய்)

**திருமதி இ. லோகநாதன்**

(இளைப்பாறிய பொதுமுகாமையாளர், மானிப்பாய்)

**திரு இ. ஜெயக்குமார்**

(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

**உரிமையாளர்**

(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில் கிழக்கு)

**திரு ஐ.கோ. சந்திரசேகரம் J.P**

(மார்ஷல் யா பல்கலைக்கழகம்)

**திரு ஸ்ரீ. கணேஸ்வரன்**

(சச்சி மோட்டோர்ஸ் வேக்ஸ், திருநெல்வேலி)

**திரு நா. சுந்தரம்**

(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)

**திரு வெங்கடாசலம் திவாகர்**

(தாதி உத்தியோகத்தர், தம்பாலை)

**திரு S. இராசரத்தினம்**

(இளைப்பாறிய பிரதேச அத்தியட்சகர், நல்லூர் யாழ்ப்பாணம்)

# பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக

**திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

சைவநெறி, தானதர்மங்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கிறது. தானங்களில் பலவகை உண்டு. அவற்றுள், அன்னம், தண்ணீர், உடை என்பவற்றைத் தேவைப்படுவோருக்குத் தானமாக வழங்குதல், மிக உயர்வான தானம் என்று சொல்லப்படுகிறது. "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்கிறார் திருமூலர். சாப்பிடும் வேளைகளில், தாம் உண்ணும் உணவில் ஒரு பகுதியை அதிதி ஒருவருக்காயினும் கொடுத்து உண்ணவேண்டும் என்கிறது சைவநெறி. "தானத்திற் சிறந்தது அன்னதானம்" என்பது சைவர்களின் நிலைப்பாடு. தினமும் ஒருவருக்கு உணவளிக்காது உண்பது பாவம் என்று கருதப்படுகிறது. இல்லறத்தார், சமையல் செய்தபின் யாராவது உணவு உண்ண வருவார்களா என்று எதிர்பார்த்து வீட்டு வாயிலில் நிற்கின்ற வழக்கம், முன்னர்க் காலங்களில் இருந்தது. விருந்தோம்பல் சைவப் பண்பாடாக மலர்ந்தது.

வீடுகளில், அதிதி, வயோதிபர்கள், குழந்தைகள் என்போருக்கு முதலில் உணவு கொடுத்துச் சாப்பிடச்செய்த பின்னரே, கணவன் மனைவி ஆகியோர் சாப்பிடுவது சைவ வழக்கம். எத்தகைய உணவானாலும் முதலில் இறைவனுக்கு அர்ப்பணித்து, உணவைக் கிடைக்கச் செய்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறிவிட்டுத் தான் உண்ணுதல் சைவ மரபு. இறைவனுக்கு அர்ப்பணம் செய்த உணவு அமிர்தமாகின்றது; அவ்வாறு அர்ப்பணிக்காத உணவு நஞ்சாகி விடுகின்றது.

விரதம் அனுட்டிப்பவர்கள் காகத்திற்கு முதலில் சோறு வைத்துவிட்டுக், காகம் சாப்பிடும் வரை காத்திருந்து, அது உண்டபின், தாம் சாப்பிடும் வழக்கம் இருந்துவருகிறது. புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் அனுட்டிப்பவர்கள் காகத்திற்குச் சோறு வைத்து உண்ணும் வழக்கத்தை இற்றைவரை கடைப்பிடித்து வருகிறார்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன. "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்" வழக்கம் சைவ மக்களிடையே நெடுங்காலமாக இருந்துவருதலைக் காட்டுகின்றன. ஆனால், இன்று எச்சிற் கைகொண்டு கூடக் காக்கைக்கு நீட்டாத பேர்வளிகளையே காண்கிறோம். இந்த நிலை மாறவேண்டும். நலிந்தோர் ஊனமுற்றோர், ஏழைகள், பசித்து வருவோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு அன்னம், வஸ்திரம், ஆடை என்பவற்றை உபகரித்து ஆதரவு அளிக்க வேண்டியது சைவசமயக் கடமையாகும். சைவசமயம், சமூகப்பணிகளையும் சமயப்பணிகளாகவே கொள்ளுகின்றது என்பதை நாம் கருத்திற்கொள்ளுதல் அவசியம். இத்தகைய தானதருமங்களைச் சைவ மக்கள் செய்யாமல் விடுவதாலேயே, சைவ சமயத்தில் சமூகசேவைக்கு இடமளிக்கவில்லை என்று வீணான குற்றஞ் சுமத்தப்படுகிறது. உண்மையில் சைவ சமயத்திற்றான் சமூகப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்

கிறது. தானம் செய்தல், தருமஞ் செய்தல், அறஞ்செய்தல் என்பன சைவ சமயத்திற் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன. நாயன்மார்களின் வரலாறு சமூகத்தொண்டின் வரலாறாகவே உள்ளது. "என் கடன்பணி செய்து கிடப்பதே" என்கிறார் நாவுக்கரசர். பிடியரிசி பெற்றும் கஞ்சித் தொட்டித் தருமம் செய்தும் சமூக சேவைக்கு வழிகாட்டியிருக்கிறார் நாவலர் பெருமான்.

அன்னதான மடங்களில்லாத கோயில்களே இல்லை. அன்னசத்திரங்கள் இல்லாத ஊர்களே இல்லை. இவையெல்லாம் சைவப்பண்பாட்டின் அங்கங்கள். ஆனால், தற்காலத்தில் நிலைமைகள் மாறிவிட்டன. சைவப்பண்பாட்டினைப் போற்றாமல் விட்டதனாற்றான், இத்துணை சீரழிவும், சைவத்தில் சமூக சேவைக்கு இடமில்லை என்ற குற்றச் சாட்டும் நம்மை வந்து அடைந்துள்ளன.

பசி எல்லோருக்கும் பொதுவானது; தாகமும் அப்படியே. மானத்தைக் காப்பதற்கு உடை தேவைப்படுகிறது. இத் தேவைகள் எல்லோருக்கும் பொதுவானவையே. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து, அவர்களின் இவ் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவுதல், ஒவ்வொருவரினதும் கடமையாகும். உண்மையில் இதுதான் சமயத்தொண்டு.

என்னதான் இறைவழிபாடு செய்தாலும்; பூஜா கிரியைகள் புரிந்தாலும்; புனித யாத்திரைகளை மேற்கொண்டாலும்; புண்ணியத் தீர்த்தங்கள் ஆடிவந்தாலும் தான தருமங்கள் செய்யாவிட்டால், அவற்றால் ஒரு பலனும் கிடைக்கப்போவதில்லை. மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்பதைக் கருத்திற் கொள்வோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

## முருகா உன் இணையடிக்கே சேர்ப்பாயே

முத்தியின் ரகசியம் அறிந்தவன் நீயே முருகப்பா - எமை
முன் நின்று காக்கும் தெய்வமும் நீயே வேலப்பா
சக்தியின் மகனே சண்முகனே குமரப்பா
சரணடைந் தோம் உன் தாள் தானே முருகப்பா
(முத்தியின்....)

நற்கதி அருளும் தெய்வம் நீயே கந்தப்பா
நமச்சிவாய மைந்தனே குருபரனே முருகப்பா
இப்பிறப் பொழிக்கும் தெய்வம் நீயே வேலப்பா
ஈசன், மகனே உனக்கு இணைதான் யாரப்பா
(முத்தியின்...)

நற் தமிழ் கடவுள் தெய்வம் தானே நீயப்பா
நான் தினம் துதித்தேன் மனதில் நிலைப்பாய் முருகப்பா
இச் செக வாழ்வோ நாடக மாயை தானப்பா - உன்
இணையடி சேர்ப்பாயே செல்வச் சந்நிதி வேலப்பா
(முத்தியின்....)

முருகப்பா செல்வச் சந்நிதி வேலப்பா- எம்
முருகப்பா செல்வச் சந்நிதி வேலப்பா.

*திரு சின்னப்பு தனபாலசிங்கம் அவர்கள்.*

**முயற்சியே தெய்வம் ஆகும்.**

உ

# இந்துசமயமும் சமயக் கோட்பாடுகளும்

**திரு த. சுகந்தன் அவர்கள்**

சமய நெறிகளுள் இந்து மதத்திற்கு மாத்திரம் தனிமையானதொரு பெயர் இல்லை. "இந்து" என்ற சொல்லானது நம்மால் வழங்கப்பட்டது. நெடுங் காலத்திற்கு முன்னர் இமயமலையின் வடமேற்குக் கணவாய்கள் வழியாக நம் நாட்டிற்குள் வந்த வெளிநாட்டவரால் வழங்கப்பட்ட சொல் அது. சிந்துவெளியில் குடியிருந்த மக்களைக் குறித்த இந்தச்சொல் பின்னர் அவர்கள் கடைப்பிடித்த சமய நெறிகளையும் குறிப்பிடலாம். இந்துமறை நூல்களில் இந்து மதத்தைக் குறிப்பதற்காக ஆளப்படும் சொற்களில் ஒன்று வைதீகதர்மம், மற்றையது சனாதன தர்மம். வைதீக தர்மமானது வேதத்தை அடிப்படையாகக் கொண்ட நெறியையும், சனாதன தர்மமானது இந்நாட்டில் என்றுமுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலான நெறிகளையும் குறிப்பிடுகின்றன. இந்து சமயக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாய் வேதங்கள் அமைந்தன.

இந்துசமயம் என்கின்றபொழுது இருவகையான கோட்பாடுகளை அவதானிக்க முடிகிறது. சாதாரணமாக சமயத்தில் பற்றுள்ளவர்களை உருவவழிபாட்டில் அல்லது மனித உருவில் தெய்வத்தை ஏற்றிவைப்பதில் நம்பிக்கை உடையவர்களாகக் கொள்வது வழக்கம். ஆனால் இந்து மதத்தைப் பொறுத்த வரையில் அப்படி ஒரு நியதி இல்லை. ஒருவன் இந்துவாய் இருந்தபோதிலும் மனித இயல்புகளை உடையவராகக் கருதப்படும் கடவுளே முழுமையான முதற் பொருள் என்று நம்பாமல் இருக்கலாம். அப்படி மனித இயல்புகளை உடையவராகக் கருதப்படும் கடவுளே முழுமையானவர் என்று நம்புகின்ற இந்துக்கள் கூட அவரைப் பல்வேறு விதமாகக் காண்கிறார்கள் என்று இருக்குவேதம் கூறுகின்றது. ஓரளவான மத சுதந்திரமும், பரந்த கொள்கைத்தன்மையுமே இந்து மதத்தின் தனியான சிறப்பியல்புகள்.

எனவே இந்து மதத்தைச் சார்ந்த முனிவர் எல்லோரும் எத்தனை விதமான மனிதர்கள் இருக்கின்றார்களோ அத்தனை விதமான மதங்களும் இருக்கின்றன என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவேதான் 1938இல் மகாத்மா காந்தி கூட "எனது இந்து மதமானது குறுகிய கோட்பாடுகளை உடையதன்று. அது இஸ்லாத்திலும், கிறிஸ்தவத்திலும், பௌத்தத்திலும் மற்றும் சேராஸ்திரியத்திலும் உள்ள நல்ல நெறிகளை எல்லாம் தன்னகத்தே கொண்டதாகும். உண்மையே எனது மதம் அஹிம்சையே அதை அறியக்கூடிய ஒரேவழியாகும்" என்று எழுதினார். 1924இல் இந்து மதத்திற்கு விளக்கம் தரும் முயற்சியாக "என்னைக் கேட்டால் அஹிம்சை முறைகளின்மூலம் உண்மையைத் தேடுதலே இந்துமதம் என்று தான் கூறுவேன்" என்று மகாத்மா கூறினார்.

நமக்குத்தெரிந்த காலந்தொட்டு இந்துசமயச் சிந்தனையின் இரண்டு வகையான கருத்தோட்டங்கள் இருக்

கின்றன. அவற்றுள் ஒன்றைக் "கடவுட் கொள்கை" என்றும் மற்றொன்றை "முழுமுதற்கொள்கை" என்றும் கூறலாம். கடவுட்கொள்கையானது ஆன்மீக உள் பொருளாகிய முழுமுதற் பொருளையே காட்டி நிற்கின்றது. பல வேதநூல்கள் தனிப்பட்ட ஒரு கடவுளின்மீதோ அல்லது மற்றொரு கடவுளின்மீதோ ஆக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் சில நூல்களில் அடிப்படையான முழுமுதற்கடவுள் புகழப்பட்டிருக்கின்றார். "புருஷ்ஸுக்தம் என்பதில் கடவுளை உலகினுள்ளேயே இருப்பவராக, அதேசமயத்தில் எல்லாவற்றிற்கும் மேலானவராகவும் காணமுடிகின்றது.

கடவுட்கொள்கையில் பொதுவாக இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்கிறவனாகவும், காக்கின்றவனாகவும் அழிப்பவனாகவும் கருதப்படுகின்றான். இறைவன் முத்தொழில்களையும் செய்வதிலிருந்துதான் இந்து மதத்தில் பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்தியர் கொள்கை எழுந்தது பிரபஞ்சக் கொள்கைகள் அனைத்தும் ஒரே கடவுளின் மேலே ஏற்றிக் கூறப்படுகின்றன. இந்து சமயக் கடவுட்கொள்கையின் ஒரு சிறப்பான அம்சம் இறைவன் உலகை அழிப்பது, மறுபடியும் உலகைப் படைப்பதற்கே, இந்த இடைக்காலத்தில் ஆன்மாக்கள் தமக்குத் தேவையான ஓய்வைப் பெறுகின்றன.

பக்தி முதிர்வதற்கும் அறிவுமார்க்கத்தைக் கடைப்பிடிப்பதற்கும் கர்மயோகம் என்று அழைக்கப்படுகின்ற தன்னலமற்ற பணியில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும். "பலன் கருதாது பணி செய்யவேண்டும்" என்பதே பகவத்கீதையின் முக்கியமான கருத்து.

எல்லைக்குட்பட்ட இன்பங்களின் மீது வைக்கப்படும் தன்னலமான ஆசையே ஆன்மாவை அனுபவ நிலையிலேயே வைத்திருக்கிறது. ஒருவன் தனக்களிக்கப்பட்ட வேலையைப் பலன் கருதாமல் செய்வானேயாகில், அவன் மனம் தூய்மையாக இருக்கும். அவனால் இறைவன் பால் சிந்தனையைச் செலுத்த இயலும், அல்லது அறிவுமார்க்கத்தில் ஈடுபட இயலும். ஒவ்வொருவனுக்கும் சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் ஆற்றவேண்டிய பொறுப்புக்கள் நிறைய இருக்கின்றன என்பதைக் கர்மயோகம் உணர்த்துகின்றது. இவற்றிலிருந்து நாம் தப்பவிழைவது சமயத்திலிருந்து விலகி நிற்கின்றோம் என்று பொருள்படும். முழுமுதற் கொள்கை, அறிவுமார்க்கம் ஆகியவற்றை வலியுறுத்திய பெரிய மகான்களை சங்கராச்சாரியார், யாஞ்ஞவல்கியர் போன்றவர்கள் மனித சமுதாயத்திற்குப் பெரும் தொண்டாற்றிய பெரியவர்கள் ஆவர். இந்து மதமானது முற்றும் துறந்தவர்களுக்கானது அன்று. அதன் முதல் தத்துவமே ஒவ்வொருவனும் சமுதாயத்தில் தனது நிலைமையையும் தனக்குரிய பங்கையும் எண்ணிப் பார்த்துத் தன்னுடைய கடமைகளைச் செய்யவேண்டுமென்பதே. அவ்வாறு செய்வானேயாகில் மேலான ஆன்மீக வாழ்க்கை அவனுக்குத் தானாகவே கிட்டும். ஆன்மீக அறிவு மலர்ச்சிக்கு மூன்று நிலைகள் அவசியம் எனக் கருதப்படுகின்றன. முதலாவது மனிதனாகப் பிறக்கவேண்டும், இரண்டாவது விடுதலையை விழைய வேண்டும். மூன்றாவது பெரியோரோடு பழகுதல் என்பனவாகும். இதனைச் செய்ய அவன்

**வாழ்வதற்கு அருகதை உள்ள எந்த மனிதரும் சாவதற்கு அஞ்சத் தேவையில்லை.**

முனிவர்களையும், மகான்களையும் பின் பற்றி இந்துமத அறிவிலும் ஆன்மீக வளர்ச்சியிலும் முழுமைபெற்றுள்ள மனிதர்கள் என்றுமே இருந்து வருகின்றார் கள் என்பதை உணர்ந்தான். மகாத்மா காந்தி "இந்துமதம் என்னைக் கைவிடு மானால் என் வாழ்க்கை ஒரு சுமையாக மாறிவிடும்" எனக் கூறினார். அவரது மேன்மையான வாழ்க்கை இந்துமதம் ஒருவரையும் ஒரு பொழுதும் கைவிடாது. என்பதற்குச் சீரியதோர் எடுத்துக்காட்டு. இந்து மதத்தின் உண்மைகளையும் நெறிமுறைகளையும் அறியவேண்டு மென்று மனமாரவிழைபவர்களை அது ஒருநாளும் கைவிடாது.

(தொடர்ச்சி...

**2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| தம்பு கிருஸ்ணபிள்ளை | துன்னாலை மேற்கு கரவெட்டி | 5000. 00 |
| அமரர் S.K. சிவபாலன் நினைவாக | சித்தங்கேணி | 1000. 00 |
| S. வளர்மதி நல்லூர் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| மு. விசயரெத்தினம் காட்டுப்புலம் | தொண்டைமானாறு | 1மூடை அரிசி 1500. 00 |
| மோகன் கண்ணன் இமையாணன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| சி. சிவபாலசிங்கம் G.S. தாயாரின் நினைவாக | பொலிகண்டி | 3மூடை சீனி, அவல் |
| P. அப்புத்துரை | வயாவிளான் | 1500. 00 |
| ந. இந்திரகுமார் குடும்பம் | கதிரிப்பாய் | 1000. 00 |
| ப. கலாதரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| திரு திருமதி ஜெயக்குமாரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 9000. 00 |
| சோமசுந்தரம்மூலம் செல்வக்குமார் குடும்பம் | கனடா | 50000. 00 |
| திருமதி கவிதா லலீசன் | அச்சுவேலி | 1மூடை அரிசி 10k. பருப்பு |
| Dr. G. பவானி மகப்பேற்று நிபுணர் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| க. ஞானச்சந்திரன் நாகலிங்கம் வீதி | கொக்குவில் | 2000. 00 |
| சி. நடேசமூர்த்தி | அச்சுவேலி | 3000. 00 |
| சத்தியவடிவேலு சாந்தன் | இலண்டன் | 50000. 00 |
| பாலச்சந்திரன் அர்ச்சனா | அவுஸ்திரேலியா (வல்வை) | 10000. 00 |
| பாலச்சந்திரன் யாதவன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| சண்முகராசா குடும்பம் | | 21275. 00 |
| S.R.P. அன்சன்ஸ் | புத்தளம் | 1மூடை அரிசி |
| மார்க்கண்டு முத்துப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. பாலசிங்கம் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| ஆ. இராசரெத்தினம் காலிவீதி | பம்பலப்பிட்டி | 1000. 00 |
| திருமதி சின்னையா | கரணவாய் | 2000. 00 |
| கனகரூபன் ராகுல் பொற்பதிவீதி | கோண்டாவில் | 40000. 00 |

(தொடரும்...

**குறிக்கோள் சிதறாத துடிப்பான கவனம்தான் வெற்றிக்குச் சிறந்த வழிகாட்டியாகும்.**

உ

# ஆலய வழிபாடு

திரு க. சிவசங்கரநாதன் JP அவர்கள்

காலையில் சூரிய உதயத்திற்கு முன்பு நித்திரைவிட்டு எழவேண்டும். இதை முதல் ஒழுக்கம் என ஆசாரக் கோவை கூறுகிறது. வேதங்களும் இதையே வலியுறுத்துகின்றன. இந்துமத சாஸ்திரங்கள் பிரம்ம முகூர்த்தத்தில் எழவேண்டும் எனக் கூறுகின்றன. பிரம்ம முகூர்த்தம் என்பது காலை 4.00 மணியாகும். அப்போது எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு நன்கு தோய்ந்து குளித்துவிட்டுக் கடவுளைத் தியானிப்பது மிகச் சிறந்ததாகும். காலையில் எழுந்ததும் நமது கைகளை விரித்து உள்ளங் கைகளைப் பார்த்து இலக்குமி சரசுவதி பராசக்தியை மனத்தில் நிறுத்தி உள்ளம் உருகித் தியானிக்க வேண்டும். செல்வத்தைத் தருபவள் இலக்குமி; கல்வியைத் தருபவள் சரஸ்வதி; சக்தியைத் தருபவள் பராசக்தி இவர்கள் மூவரும் நமது உள்ளங்கையில் இருக்கிறார்கள் என்பது ஐதீகம்.

மனித உடல் எந்த நிறத்தில் இருந்தாலும் உள்ளங்கைகள் வெளுப்பாகவே இருக்கும். நமது உள்ளங் கையில் கண்களையும் மனத்தையும் செலுத்தித் தியானிப்பதன்மூலம் தீய பலன்கள் கழிந்து நற்பலன்கள் உண்டாகும். ஆலய வழிபாட்டிற்குச் செல்லும் போது குளித்தோ, தோய்ந்தோ தூய்மையான ஆடை உடுத்துத் திருநீறு, உருத்திராக்கம் அவரவர் ஆசாரத்திற் கேற்ப அணிந்து ஆலயம் செல்வது உத்தமம்.

திருக்கோயிலின் முன் அமைந்துள்ள திருக்குளத்திலோ (கிணற்றிலோ) கைகால்களைக் கழுவிக்கொண்டு கோபுரத்தின் முன்நின்று இரண்டு கரங்களையும் தலைமேற் குவித்து அண்ணாந்து நோக்கிக் கோபுர தரிசனம் செய்ய வேண்டும். ஆலயங்களின் கோபுரத்துக்கெதிரில் ஜீவன்களாகிய நாம் நின்றால் இறைவனாகிய பரமாத்மா எங்கும் நிறைந்து யாவரும் காணும்படியாக இருக்கிறார். அவருக்கு எதிரே நாம் மிகவும் சிறியவர்கள் என்ற அடக்க உணர்வு ஏற்படும் பணிவு தோன்றும். அப்போது நம்முடைய ஆணவம் எல்லாம் ஒரு கணத்தில் அடங்கிவிடும். கோபுர உச்சியில் அமைக்கப்பட்டுள்ள செப்புக்கலசங்கள் இடி மின்னல் ஆகியவை தாக்கும்போது அதனை ஈர்த்துப் பூமியிற் பாய்ச்சிவிடும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் ஆகும். கோயில் சென்று வழிபட முடியாதவர்கள் தூரத்தே நின்றுகூட கோபுர வழிபாடு செய்யலாம். இது கர்ப்பகிருஹத்தில் இருக்கும் இறைவனை வழிபட்டதற்கு சமமாகும். கோபுரத்தை ஸ்தூலலிங்கமாகவும் கோபுர வாயிலை இறைவனின் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குள்ளே புகவேண்டும் கோவில் நமது உடம்பின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதனை சேஷத்திரம் சரீரபிரஸ்தாரம் என்பர்.

உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் ஜீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே

என்று திருமூலர் கூறியுள்ளார்.

ஆலயத்திற்கு உள்ளே செல்லும்போது சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு செல்வது சிறப்பாகும். அங்கே கொடித்தம்பத்தையும் பலிபீடத்தையும் நந்திதேவரையும் வணங்கிக் கொடித்தம்பத்திற்கு அப்பால் ஆண்கள் அட்டாங்க வணக்கமும் பெண்கள் பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும். அட்டாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மேவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இங்ஙனம் வணங்கும்போது பூமியிலே சிரசை வைத்து மார்பு பூமியிற் படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டியபின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையைநோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் பொருந்தச்செய்தல் வேண்டும். பஞ்சாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திற் பொருந்தும்படி வணங்குதலாகும்.

இவை தவிர திரியாங்க வணக்கமும் செய்தலுமுண்டு. திரியாங்க வணக்கமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்து வணங்குதலாகும். இது ஆண் பெண் இருபாலாருக்கும் உரியது. இவ்வணக்கங்களும் வீதிவலம் வருதலும் ஒருதரமேனும் இருதரமேனும் செய்தல் குற்றமாம். மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் ஏழுதரமாயினும் ஒன்பது தரமாயினும் பன்னிரண்டுதரமாயினும் செய்தல் வேண்டும்.

சிவன்கோயிலென்றால் வில்வத்தாலும் பெருமாள் கோயிலென்றால் துளசியாலும் அர்ச்சனை செய்யவேண்டும். விநாயகர் கோயில் என்றால் தலையில் மூன்றுமுறை குட்டிக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணம் போடலாம் அறுகம்புல்லால் அர்ச்சிப்பது சிறப்பு சிவன்கோயில்சரி, அம்மன்கோயில் சரி, முருகன்கோயில் சரி, பெருமாள்கோயில் சரி, முதன்முதலில் விநாயக பூசைகள் இடம்பெறுவதைக் காணலாம். விநாயகரை ஒருதரமும் சிவனை மூன்று முறையும் அம்பாளையும் பெருமாளையும் (விஷ்ணுவையும்) நான்குமுறையும் ஏனைய தெய்வங்களை மூன்றுமுறையும் வலம்வந்து வணங்கவேண்டும் என்பது மரபு. மூன்றுமுறை வலம்வருவதால் ஏற்படும் பலன் விரும்பியகாரியம் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| ஐந்துமுறை | - | காரிய வெற்றி |
| ஏழுமுறை | - | நல்லகுணம், எண்ணம், அமைதி |
| ஒன்பதுமுறை | - | ஆயுள் விருத்தி |
| பன்னிரண்டுமுறை | - | உடல்வலிமை |

ஆலய தரிசனத்தை மேற் கொண்டபின் இறுதியாகச் சண்டேசுரரைத் தரிசித்துத் தோத்திரம் செய்து மூன்றுமுறை கைகொட்டிச் சிவதரிசன பலனைத் தந்தருளுமாறு பிரார்த்தித்து வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியை அடைந்து இடபதேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப்பெருமானைத் தரிசித்துப் பலிபீடத்திற்கு இப்பால் மும்முறை வணக்கம்செய்து எழுந்து அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந்தெழுத்தை இயன்றமட்டும் உருச்செபித்துக்கொண்டு சிவசிந்தனையோடு அமைதியாக வீடு செல்லுதல் வேண்டும்.

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| கி. நல்லம்மா | இடைக்காடு | 1000. 00 |
| க. செல்வராசா கட்டைவேலி | கரவெட்டி | 1000. 00 |
| S. மிகிந்தலா | கரவெட்டி | 1200. 00 |
| இராசரெத்தினம் இராசஇராகுலன் | சுண்ணாகம் | 5000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி சாளம்பை | கரணவாய் | 1000. 00 |
| மா. தங்கவேல் (பலாலி) போடிங்றோட் | பருத்தித்துறை | 4000. 00 |
| ஆனந்தமயில் சுபகா கலட்டிவீதி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| த. கணேசமூர்த்தி குடும்பம் (வங்கி) | இராமநாதன் வீதி யாழ்ப்பாணம் | 3000. 00 |
| நல்லைநாதன் நீசராஜா | கோப்பாய் வடக்கு | 1000. 00 |
| அ. தபேசன் (இரசாயனவியல் துறை) | யாழ் பல்கலைக்கழகம் | 1000. 00 |
| மனோகரன் அபிராமி | பிரான்ஸ் | 5000. 00 |
| தர்ஷினி மகேந்திரம் 3ம் கட்டை | பலாலி வீதி | 2000. 00 |
| திருமதி ச. நந்தகுமார் குடும்பம் | மாரீசன்கூடல் இளவாலை | 2000. 00 |
| S. சிவலிங்கராசா விரிவுரையாளர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| S. கிருபாகரன் உப தபாலகம் | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| க. மாதவன் மருதம் | கரவெட்டி | 20000. 00 |
| சி. பிரதீபன் மருதம் | கரவெட்டி | 10000. 00 |
| துரைராசா மகிழ்மாறன் | தெகிவளை கொழும்பு | 10000. 00 |
| த. காசிநாதர் | சிறுப்பிட்டி தெற்கு | 1500. 00 |
| ஜெயரட்ணம் ஜெயகாந்தன் | துன்னாலை | 2000. 00 |
| தர்மசீலன் ஜெயந்தி | துன்னாலை | 500. 00 |
| ப. நடராசா | சாவகச்சேரி | 3000. 00 |
| S. தியாகராஜா மயூரினியின் நினைவு | திருமலை | 1000. 00 |
| Dr. R. இராமச்சந்திரன் | மஸ்கெலியா | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் நினைவு | பத்தமேனி | 1000. 00 |
| மு. பஞ்சலிங்கம் காரைக்கால் வீதி | இணுவில் | 10000. 00 |
| S.K. குமாரசாமி யூனியன்லேன் | கரவெட்டி | 2000. 00 |

(தொடரும்...

**அறிவும் அறியாமையும் சேர்ந்ததே மனம்.**

உ

# மனிதப் பிறவியின் மாண்பு

ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பது வள்ளுவர் திருவாய் மொழியாகும். இஃது அரிய மானுடப்பிறவி எடுத்தவர்க்கே வள்ளுவர் அருளியுள்ளார். வள்ளுவப் பெருந்தகை திரிகாலமும் உணர்ந்த ஞானி. அவர் மனிதர்களை நன்னெறிச் செலுத்த ஆற்றுப்படுத்தற்காக திருக்குறளை ஆக்கித்தந்துள்ளார்.

தாண்டக வேந்தராம் அப்பரடிகள், மனிதப் பிறவி எதற்கு? அதன் பயன் யாது? என்பதைச் சாதனையிற்கண்டவாறு சொல்லோவியமாகத் தீட்டித்தந்துள்ளார். அந்தச் சொல்லோவியத்தைச் சித்திரத்தில் எழுதுவதுபோன்று மனத்திரையில் எழுதிவழிபட்டால் மனிதப்பிறவியின் பலனை இம்மையிலேயே அடைந்துவிடலாம் அல்லவா?

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ்ஞ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரத் தீவிளைத்தான் தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட்டிருப்பதன்றோ நுந்தம் கூழைமையே

என்றும் பாடியதிலிருந்து மிகவும் அவசியமானது மனிதப்பிறவி எனத் தெரிகின்றது.

மனிதப்பிறவியின் அருமை பெருமை நோக்கம் எதுவும் அறியாமையினால் நாட்டிலும் சமுதாயத்திலும் அமைதியின்மை மலிந்துள்ளது.

இதனால் மக்கள் அல்லற்பட்டு ஏன் இந்தப் பிறவி எடுத்தோம் உயிர்வாழ ஒருவகையுமில்லை உயிரை உடம்பில் நிறுத்திக்கொள்ள வழியும் இல்லை அதனால் உடம்பை நாமே அழித்து விடுவோம் என்றும் துணிகின்றனர். இப்படியானவர்களே மட்டுமல்ல். புகழுக்கும் பொருளுக்குமாக உடம்பை வளர்ப்பவர்களுக்கும் சேர்த்து மனிதன் உடம்பை ஏன் பேணிப்பாதுகாக்க வேண்டும். உடம்பு ஒன்றினாலேதான் இம்மைக்குரிய சுகபோகங்களைச் சேகரிக்க முடியும். வெளிமயக்கம் தருகின்ற புறச் சுக போகங்களும் அழியும் தன்மையுடன் பிறவிக்கடலுக்கும் வித்திடுகின்றன.

எல்லாப் பிறவிகளிலும் சிறந்தது மனிதப்பிறவி. இப்பிறவியின் உடம்பு அழியும் தன்மையுடையது. அதனால்

அழியாப் பேரின்பநிலையை அடையும் வழிவகைகளே உடம்பு உள்ளபோதே தேடிச் சேமிக்க வேண்டும். ஏன் அழியும் தன்மை உள்ள உடம்பை உயிருக்குத் தரவேண்டும்.

உலகில் எப்போதும் நிலை யானது பதி, பசு, பாசம் என்பவையாகும். பதி- கடவுள், பசு- உயிர், பாசம்- ஆண வம், கன்மம், மாயை. நிலையானதும் அறிவுள்ளதுமான பொருள் கடவுள். அறிவித்தால் அறியும் பொருள் உயிர், தன்மயமாக வேண்டி இறைவன் தனு, கரண, புவன போகங்களைப் படைத்தார். ஆணவம் அறிவித்தாலும் அறியாது. அறிவிக்கா விட்டாலும் அறியாது ஆனால் உயிரைப்பற்றி நின்று பிறவிக் கடலுள் ஆழ்த்தி விடுகின்றது.

பிறவிகள் ஏழாகும் எனத் திரு வாசகத்தில் உள்ள திறவுகோலாகிய சிவபுராணத்தில் மணிவாசகப் பெருமான்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்.
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

எனப் பிறவிகள் ஏழெனக் கூறு கின்றார். அநாதியான உயிர்கள் ஏழு வகையான பிறவிகள் எடுத்தபின்பு கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை எடுக் கின்றன. புல்லாகிப் பூடாய் என்று தொடங்கிக் கல்லாய் மனிதராய்ப் பிறவி எடுத்தபின்பு தொடர்ந்தும் பிறவித் தர்மத் திற்கேற்ப மீண்டும் மனிதப்பிறவி பேயாகக் கணங்களாக வல்லசுரராகி முனிவராய்த் தேவராகிய பின்பும் இயங் குகின்ற பல பிறவிகளையும் கடந்தே மனிதப் பிறவியாகப் பிறந்ததாகக் கூறு கின்றார். ஆக இப்போது மனிதப்பிறவி எடுத்தவர்கள் உடனும் எல்லாப் பிறவி களையும் கடந்தவர் அல்லர் என்பது தெளிவாக அறியக்கிடக்கின்றது.

பாடசாலையில் படிக்கின்ற மாணவர்கள் அந்தந்த வகுப்பிற்குரிய பாடங்களைச் சரிவரப் படித்துப் பரீட்சை எழுதும்போது சரியாக எழுதினால் வகுப்பேற்றம் கிடைக்கும். சரியாக எழுதாத வரை இருந்த வகுப்பிலே மீண் டும் அதாவது சரியாகப் பாடம் எழுதும் வரை இருந்த வகுப்பிலே இருக்கவேண்டி நேரிடுகின்றது. இதுபோல ஒவ்வொரு பிறவிக்கும் அதுஅதற்குரிய தர்மங்கள் உண்டு. அத்தர்மங்களைச் செய்யாத விடத்து இறந்து அதே பிறவி எடுக்க வேண்டும்.

எல்லாப் பிறவிகளிலும் மனிதப் பிறவி சிறந்தது. எதனால் அவன் செயற் கரிய செயல்கள் செய்வதனால் இக் கோட்பாடுகள் இல்லாத மக்களும் உண்டு. பிறவிகளில் புல் முதலாவது பிறவியாகும். புல்வகை சிறப்பில்லையா? ஏன் சிறப்புண்டு. மனிதராய்க் கணங் களாய்... என்ற அடிகளுக்கு மேலேயுள்ள புல்லாகி என்று தொடங்கிக் கல்லாகி மனிதராய் வருகின்ற சிவபுராண அடிகள் பிறவிகளில் மனிதனைத் தவிர்ந்த மற்றப்பிறவிகள் ஏதோ ஒரு விதத்தில் தமது ஊன் உடம்புடன் இறைவனுக்கும்

மனிதனுக்கும் பிற உயிர்களுக்கும் உதவி செய்கின்றன. இவற்றை ஆராயின் கட்டுரை மிகமிக விரியுமெனினும் சுருக்க மாகச் சுட்டிக் குறிப்பிடுகின்றேன். இறை வன் படைப்பில் புல்வகையில் எத் தனையோ வகையான இனங்கள் உண்டு. சில வனப்புற்கள் மருந்திற்கும் ஆடு, மாடு போன்றவைகளுக்கும் பயன்படு கின்றன. அறுகு, தர்ப்பை போன்றவை இறைவனுக்கும் பல கிரியைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. அறுகு பிள்ளை யாரை அருச்சிப்பதற்கு விசேடமானது.

புழு என்றால் எவரும் அரு வருத்து அதனைத் தூர வீசிவிடுவார். புழு இனத்தைச் சேர்ந்தது பட்டுப்பூச்சி. இதிலிருந்து உண்டாக்கப்படுகின்ற பட்டு இறைவனுக்கும் அணிவிக்கப்படுகின்றது. மரவகையில் ஒருசில நச்சு மரங்களைத் தவிரக் கொன்றை, வில்வம், வன்னி போன்ற மரங்களின் இலைகள் சிவன் பிள்ளையார் போன்ற தெய்வங்களை அர்ச்சிக்க உகந்தவையாகும். இவ்வாறு அஃறினை உயிரினங்களில் கருடன் கிருஷ்ணபகவானின் வாகனம்; அன்னம்; பிரமனின் வாகனம்; காகம் சனிபகவானின் வாகனம் இவ்வாறு வீட்டு வளர்ப்புக்குரிய பறவை இனங்களும் உண்டு. ஏதோ உயிர்திணையாகிய மனிதனில் இருந்து பெறப்படும் பயன்களில் ஒருசிறு துளிகூட இறைவனுக்குப் பயன்படுவதில்லை.

இதற்கு ஓர் கதையுண்டு. இக் கதை செவிவழி ஆதிகாலம் தொட்டுக் கேட்கப்பட்டு வருகின்றது. முதன்முதல் இறைவன் மாட்டையும் மனிதனையும் படைத்துப் பூவுலகிற்போய் வாழுங்கள் என்று அனுப்பினான். மனிதன் மாட்டைப் பயன்படுத்தி உழுதான். பின்னர் நிலத் தைப் பண்படுத்தி நெல் விளையச் செய்யும் அளவும் மாட்டின் உதவியைப் பெற்றான். நெல்லை அறுவடை செய்த பின் நெல்வேறு வைக்கோல் வேறாக்கி வைக்கோலை மாட்டிற்கு உணவாகக் கொடுத்தான். நெல்லைக் குற்றி அதன் தவிடு அரிசி கழுவிய நீர், அரிசியைச் சோறாக்கிய பின் அதன் கஞ்சியை மாட்டிற்குக் கொடுத்தான். இவ்வாறு கடலை, பயறு, உழுந்து வேறுவேறு பயிர்களைச் செய்து பிரயோசனமானதை தான் எடுத்துக்கொண்டு கழிவுகளை மாட்டிற்குக் கொடுத்தான்.

மாட்டிற்கு கோபமும் அழுகையும் வரவே இறைவனிடம் சென்று தனது குறைகளையும் மனிதன் செய்து வரு கின்ற அடாத செயல்களையும் சொல்லி அழுதது. அப்போது பரமசிவன் மாட்டின் முதுகைத் தடவி வருத்தப்படாதே. மனிதனி லிருந்து சிறிய உரோமம் வரை எனக்கு உதவாது. ஆனால் உன்னில் ஆண் வர்க்கம் (விடை அல்லது ஆண்மாடு) எனக்கு வாகனமாகின்றது. பசுவின் கழிவு கள் அதாவது பாலிலிருந்து பெறப்படும் தயிர், நெய் என்பனவும் கோசலம், கோ மயம் என்பனவும் எனக்கு அபிடேகமாக, நைவேத்தியமாகப் பயன்படுகின்றன. ஆகப் பலதுறையிலும் மனிதனைத் தவிர்ந்த ஏனையவற்றில் ஏதோ ஒருசில பயன்படுகின்றன என்று கூறினார்.

மனிதன்- மனுசன்- மனு + ஷன். மனுவென்றால் நீதியை உடையவன். அவ்வாறு நீதியை உடைய மனிதனைக் காண்பது கார்த்திகைப் பிறை காண்பது போல. குணங்களிலும் அங்கங்களிலும் முழுமைபெற்ற மனிதனைக் காண்பது, நெற்குவியலில் கலந்து காணப்படும் பதர் நெல்லைக் கழித்து எடுத்த நெல்லைப் போன்றவர் ஆவர். எல்லாரும் மனிதர்

**பேராசை இல்லாவிடில் ஆயுதங்களுக்கு அவசியமே இருக்காது.**

போன்று இருப்பினும் அவருள் நெல்லின் பதர் போன்ற மக்களும் உளர்.

யோகர் சுவாமிகள், நல்லூர்த் தேரடிச் செல்லப்பாச் சுவாமிகளிடம் சென்றார். அக்காலத்தில் செல்லப்பாச் சுவாமிகளை விசரன் என்றே அழைப்பர். செல்லப்பாச் சுவாமிகளின் உண்மை நிலை அறியாது பொதுமக்கள் சுவாமிகளை விசரன் என்று அழைப்பதைச் சிவயோக சுவாமிகள் அறிய ஆவல் கொண்டார். பல மனிதர் நல்லூர் ஆலயம் வந்தனர். ஒவ்வொருவராக அவர்கள் ஆலயத்தினுள் நுழையும்போது அதோ புலி ஓடுகிறது, சிங்கம் போகிறது, நரி ஓடுகிறது. இவ்வாறு ஒவ்வொருவரின் குணாதிசயங்களை வைத்து அவர்களுக்குத் தகுந்த மிருக கணங்களின் பெயர்களைச் சுட்டிக்காட்டினார். இப்போது ஒவ்வொருவர் பிறந்த நட்சத்திரங்கட்கு அவர்களின் கணம் யோனி பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பாருங்கள். மனிதப்பிறவியென்ற பெயரில் மிருகங்களிலும் கேவலமான குணமுடையவர்களும் மனிதவடிவில் உள்ளனர் என்பதைச் செல்லப்பாச் சுவாமிகள் தமது அகக்கண்ணால் (ஞானக்கண்ணால்) குறிப்பாகக் காட்டினார். யோகரைக் கண்டதும் இவன்தான் மனிதன் என்று அழுத்தமாகக் கூறினார்.

(தொடரும்...

## சுகம் பெறும் இந்த வையகமே

ஞானச்சுடரே சந்நிதியே
அகம் வைத்தென்றும் அதியுயர் பக்தி
அரிச்சுவடாகும் உன் நிதியே
யுகம் யுகமாக உந்தனின் அருளிற்
சுகம் பெறும் இந்த வையகமே
சுகம் தரும் உந்தன் அருள் திருவாக்கு
சுடர் ஒளிஞானமாகிடுமே!

அவனியில் உன்போல் அருள் கொழிப்பில்லை
அனைத்தும் கந்தன் அருட் செயலே
பவனிகள் வந்து பாரெலாம் பக்திப்
பரவசமாகும் உன் பதிப்பே!
உவகை கொண்டு உன்னருள் கண்டு
உள்ளம் உருகிட என்றும் வாழ்த்துகிறோம்
வருவாய் திங்கள் தோறும் எங்கள்
வாசல் வந்து அருள் பொழிவாய்!
குருவாய் உன்னைப் போற்றித் துதிப்பேன்
குறைகள் தீர்த்தெமை ஆட்கொள்வாய்!
குருவாய், உயிராய், உளதாய், இலதாய்
வருவாய்! வந்து அருள்புரிவாய்!!
திருவாய் பொலியக் குமரா உன்னைத்
தினமும் துதிக்க நீ வருவாய்....

*திரு க. கணேசலிங்கம் அவர்கள்.*

உ

# மன அமைதியைப் பெறப் பழகிக் கொள்வது எப்படி?

**செல்வி சரவணமுத்து அவர்கள்**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வடிவில் அமைதியும் ஒன்று. மனமானது ஒரு குரங்கு. அதனை ஒருநிலைப்படுத்துவதற்கு ஊடகமாக அமைவன இறைதியானம், விரதம், பஜனை, பாடல், சைவக்கிரியை நெறிகள் என்பனவாம்.

செல்வத்துள் செல்வம் எது? என்ற வினா காலந்தோறும் எழுப்பப்பட்டு வந்த வினாவேதான். காலம், நேரம், சந்தர்ப்பம், சூழ்நிலை என்பவற்றிற்கேற்பப் பல்வேறு விடைகளும் அளிக்கப்பட்டு வந்தன. பணம் என்றும் பண்டம் என்றும் கல்வி என்றும், செவிச்செல்வம் என்றும் பலவாறு கூறப்பட்டன. ஆனால் இன்று மனச்சாந்தியே செல்வத்துள் செல்வமாக இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். மனச்சாந்திக்குத்தான் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாரைக்கேட்டாலும் சாந்தி இல்லை, அமைதி இல்லை, நிம்மதி இல்லை என்றுதான் கூறுகின்றனர். புறச்சாந்தியிலும் அகச்சாந்தியே முக்கியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல அகத்தில் சாந்தி இருந்தால்தான் புறத்திலும் இருக்கும்.

நம் முன்னோர்கள் சமயம் என்ற ஒன்றை ஏற்படுத்தியமை வீணுக்கன்று. சமயத்தின்மூலம் ஒவ்வொருவர் மனத்திலும் சாந்தி, சமாதானம், நிம்மதி என்பவற்றை நிலைநிறுத்த முடியும் என நம்பினர். சமய நெறிமுறைகளை ஒழுங்காக அனுட்டிப்பதன்மூலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தனர். இன்று பெரும்பாலும் சமய நெறிகள் வாழ்வில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதனால் மனிதவாழ்வில் நிம்மதியும் பறிபோகிறது.

மனஅடக்கம், புலனடக்கம் என்பவற்றின்மூலம் பெறப்படும் சாந்தி நித்தியமானது. தியானம், சமயவாழ்வு என்பன மனஅடக்கத்தையும் புலனடக்கத்தையும் ஏற்படுத்த உதவுகின்றன. மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் மனத்தைச் சாந்தப்படுத்த முடியும். மனத்தில் தோன்றுகின்ற உணர்ச்சிகளில் பெரும்பாலானவை தீய உணர்ச்சிகளே. அதனால் நிம்மதி குலைகிறது. சமய நெறியில் வாழ்வதன்மூலம் தீய உணர்ச்சிகள் தோன்றாமல் தடுக்கமுடியும். அதே வேளை உணர்ச்சிகளை அறிவினாலும் அடக்க இயலும். பகுத்தறிவு என்ற பெயரில் எப்படி எப்படியெல்லாம் நடந்துகொள்கிறோம். ஆனால் அந்தப் பகுத்தறிவு தீய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. தூய நல்லறிவினாலேயே மனத்தில் தோன்றும் எல்லையற்ற தீய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும். உணர்ச்சிகளைத் தூய அறிவினால் வெல்பவர்களே உத்தமர்கள் ஆவர்.

மனச்சாந்தி குலைவதற்குப் பல காரணிகள் உள்ளன. அழுக்காறு, அவா, வெகுளி, வெறுப்பு, இன்னாச்சொல் என்பவற்றால் நாம் ஆளப்படும்போது, எமது சாந்தி பழுதுபட்டுவிடுகிறது. எமது நிம்மதிக் குலைவுக்கு முதலில் நாமே காரணம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

பிறர்மீது பொறாமை கொள்ளக்

கூடாது. பிறர்பொருளில் இச்சை கொள்ளல் ஆகாது. பிறர்மீது கோபங்கொள்ளக் கூடாது. பிறருடன் பகைத்தல் ஆகாது. பிறருடன் கடுஞ்சொல் பேசக்கூடாது. இவ்வாறு நடந்துகொள்ளப் பழகிக் கொள்வோமானால் நாம் நிம்மதியாக வாழலாம். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுத கதைபோல நிம்மதியைப் பெறுவதற்குரிய வழிமுறைகளை எம்மிடத்தில் வைத்துக்கொண்டு வெளியில் அதனைத்தேடி அலைகின்றோம்.

நிம்மதியைப் பாதிக்கும் ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம். அதாவது கோபம் ஒரு போதை. அதற்கு அடிமையாகிவிட்டால் எமது பகுத்தறிவு பறிபோய்விடும். என்ன பேசுவது, என்ன செய்வது என்று எதுவுமே தெரியாமல் இருக்கும். அதனால் எத்தனையோ கெடுதிகள் தீமைகள் ஏற்படுகின்றன. காலையில் கோபத்துடன் வாழ்க்கையை ஆரம்பித்துப் பகல் முழுவதும் கோபத்துடன் உறவாடி வாழ்க்கையை நடாத்தி, இரவில் கோபத்துடனேயே படுக்கைக்குப் போய்த் தூக்கத்தையும் கெடுத்துக் கொள்ளும் பலரை நாம் காண்கிறோம். அவர்கள் தூக்கத்தை மட்டுமா கெடுத்துக்கொள்கிறார்கள். வாழ்க்கையையும் அல்லவா கெடுத்துக்கொள்கிறார்கள். இப்பொழுது கோபத்தை எவ்வாறு தவிர்ப்பது அல்லது தணிப்பது என்னும் வினா எழுகிறது. பெரியவர்கள் அதற்கும் வழிகூறியிருக்கிறார்கள்.

முதலில் கோபம் வருகின்றது என்று தெரிந்ததும் ஒரு தம்ளர் தண்ணீர் அருந்தவேண்டும். அதன்பின் முடியுமானால் முகம் பார்க்கும் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டும். அமைதியாகப் படுத்துக்கொள்ளலாம். அல்லது கோபம் ஏற்பட்ட இடத்திலிருந்து விலகி வேறிடத்திற்கு நடந்து செல்லலாம். கடவுளின் நாமங்களைச் செபிப்பதோடு, தோத்திரங்களையும் மனமுருகிப் பாட வேண்டும். நல்ல சிந்தனைகளை மனத்தில் வரவழைக்கவேண்டும். ஏதாவது நற்கருமங்கள் சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டுப் பொறிபுலன்களை நன்மையில் நாட்டமுறச் செய்தல் அவசியம். "மௌனம் கலகநாஸ்தி" என்பர். மௌனமாக இருத்தல் மிக நன்று. ஒரு கைதட்டி ஓசை எழாது. கடவுளிடம் சகலதையும் ஒப்படைத்துவிட்டுக் கடவுள் சிந்தனையோடு சும்மா இருந்தாலே மிக உயர்ந்த சாதனை என்கிறது சைவநீதி.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் நல்லறிவுபெற்றவனாக வாழ வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு அமைதியான சூழ்நிலையில் உருவாக்கிக் கொள்ளவேண்டும். சிறுவயதில் கிரிசாம்பாள் கதை ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. வறுமையின் சூழலில் ஒரு பிரபு சிறியவர்களுக்காகச் செய்து வைக்கப் பட்ட மோதகங்களை எல்லோரும் சண்டையிட்டு எடுத்தார்கள். இவள் அமைதியாகப் பிரபுவிற்கு நன்றிகூறி சிறிய மோதகங்களைப்பெற்று இறுதியிலே பொற்காசையே பெற்றாள். இன்னும் ஔவைப்பாட்டி பூசையை அவதியுடன் செய்யவே பிள்ளையார் ஆறுதலாகச் செய்யும்படி கூறினார். பின் தனது தும்பிக்கையால் முதல் கைலாயத்தில் சேர்த்துவிட்டார். எனவே அமைதியாகச் செல்வதால் நன்மை பெறுகிறோம். தவறுகளை விலக்கக் காரணமாகிறோம்.

எந்தவொரு விஷயமும் அமைதியில் தான் வெற்றி காண்கிறது. தருமன் பொறுமையாக இருந்து தன் பெயரை நிலை நாட்டினான். சிறுவர்களுக்கு ஆமை, முயல் ஓட்டப்போட்டியே எடுத்துக்காட்டாக அமைகிறது. எமது தமிழ் மொழி நூல்கள் ஆசிரியர்கள் ஆன்றோர்கள் ஆழ்ந்து கற்று அமைவுற ஆசானிடம் கேட்ட அறிவுகளை எல்லாம் நூல்வடிவில் தந்துள்ளார்கள். இவைகளின் அமைதி எத்திறம் சிறந்த பண்பாகக் காணப்படுவதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாகப் பல அறிவு நூல்களில் "அமைதி" என்னும் விடயம் கூறப்படுவதை மனிதனின் ஒழுக்கத்தில் ஒன்றாக அமைவதை நூல்கள் மூலம் அறிவோம். திருக்குறளில்கூட ஓர் அதிகாரம் அமைவதை மேலதிக "அமைதி" விடயத்தைப்பெற்றுக்கொண்டு வாழ்வோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

மற்றவர்கள் சொல்வதை நீ பொருட்படுத்தாதே. உன் கடமைகளை நீ தவறாமல் செய்துவா.

இன்று உன்னைக் குறை சொல்பவர்கள் நாளை புகழ்ந்து பேசுவார்கள். இறைவனின் தொண்டன் ஒருபோதும் கவலையில் ஆழ்வதில்லை.

## பெருங்கருணைப் பெருவாழ்வே உன் பொன்னடியில் வீழ்கின்றேன்

இனிதாம் ஆற்றங்கரையினிலே இலங்கிடும் செல்வச் சந்நிதிவேலா
இன்பச் சிவக்கொழுந்தே இளங்குமரனே
நாயேன் நாளும் அறிந்தோ அறியாமலோ செய்கின்ற
குற்றமெல்லாம் பொறுத்துக் குறைவின்றிக் காப்பாயே.

உலகாளும் உமாதேவியின் ஒப்பிலா மணியே
உலகளந்தான் மருகா நீயே கதி! எம்பெருமானே
பலகாலம் துன்பத்தினால் தவித்து சொல்லமுடியா தழுகின்ற பேதை
பெருங்கருணைப் பெருவாழ்வே உன் பொன்னடியில் வீழ்கின்றேன்.

ஆடு மேய்க்கும் சிறுவனாக வந்த ஆறுமுகனே
அறுபத்தைந்து ஆலம் இலையில் அமுது படைத்து அடியார்க்கு வழங்க அருளியவனே
சின்னக்கதிர் காமமெனும் செல்வச் சந்நிதிக் கந்தா
நின்னைச் சரணடைந்தேன் அருள் ஞான வடிவேலோடு காட்சி தருவாயே.

*திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்.*

**எல்லோருடைய வாழ்க்கையின் போக்கும் அவரவர் பிராரப்தத்தை அனுசரித்தே அமையும்.**

உ

# தென்னை நாட்டுவோம்

**திரு ப. அருந்தவம் அவர்கள்**

உலகில் பல்லாயிரக்கணக்கான தாவரங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான தாவரங்கள் எல்லாவற்றுள்ளும் “கற்பகதரு” எனப்போற்றப்படும் சிறப்புவாய்ந்த தாவரம் தென்னையாகும். உலகில் விளையும் எந்தத் தாவரத்திற்கும் இந்துசமயப் புராணங்களை இயற்றிய மகரிஷிகள் கொடுத்திராத முக்கியத்துவத்தை இந்தத் தாவரத்திற்கு அவர்கள் கொடுத்துள்ளனர்.

இன்றைய உலகின் விஞ்ஞானிகள் கூட தென்னையின் பொருளியல் முக்கியத்துவம்கருதி அதனைக் கற்பக விருட்சமாகவே போற்றுகின்றனர். இதன் அடிமுதல் நுனிவரை மனிதனுக்கும், ஏனைய ஜீவராசிகளிற்கும் ஏதோ ஒரு வகையில் பயன்பட்டவண்ணமே உள்ளது.

**தென்னையின் தோற்றம்:-**

முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் மகேந்திரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை நாணாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர். பாற்கடலைக் கடையும்போது காமதேனு, கற்பகவிருட்சம் போன்றவை வெளிவந்ததாக அறியப்படுகிறது. இவ்வாறு வெளிவந்த கற்பக விருட்சமே பிற்காலத்தில் தென்னையாக உருமாற்றங் கண்டதாக ஒரு செவிவழிச் செய்தியும் உண்டு.

**சடங்குகளில் தேங்காய்:-**

இந்துக்களின் பிறப்புமுதல் இறப்புவரை எல்லாச் சடங்குகளிலும் தேங்காய் முக்கிய பொருளாகும். தேங்காய் உடைப்பது, நிறைகுடம் வைப்பது இளநீர் வெட்டுவது மட்டுமன்றித் தென்னங்குருத்தில் தோரணம் கட்டுவது எல்லாம் இந்துக்களின் சடங்குகளில் இடம்பெறும் கைங்கரியமாகும்.

**மாபெரும் கலாச்சாரப் புரட்சிக்கு வித்திட்ட தேங்காய்:-**

தேங்காய் அன்றாடம் புளக்கத்தில் வருவதற்கு முன்னர் மனிதப் பலிகளில் ஆடு, கோழி போன்ற சீவராசிப் பலிகளும் கணக்குவழக்கின்றி மலிந்திருந்தது. தெய்வத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் உயிர்க்கொலைகள் நடந்தன. அத்தகைய வழிபாட்டு முறையின்கீழ் மனிதனை அல்லது மிருகத்தைப் பலி வழங்கும் கொடூரமான வழக்கத்தை மாற்றுவதற்குப் பிராமணர்கள் தேங்காயைப் பயன்படுத்தினர். இவற்றுக்குப் பதிலாகத் தேங்காய் பலியிடப்படுவதாக எடுத்துக்காட்டினர்.

மனிதனின் தலைக்கும் தேங்காய்க்கும் உள்ள ஒற்றுமை இந்துப் பண்பாட்டுப் புரட்சியை எளிதாக்கியது. கண், மூக்கு, தலைமுடி (குடுமி) எல்லாம் மனிதனைப்போல் தேங்காய்க்கும் இருப்பது ஒப்புமைக்குச் சாதகமான காரணியாகவும் அமைந்தது.

வரலாற்றுக்கால ஓட்டத்தில் கோயில்கள் பிரமாண்டமான கோபுரங்கள்

கொண்டவையாக மாறியபோது உட்பிரகாரங்களில் பலிபீடங்கள் இருந்தனவே தவிரப் பலி நிகழ்வது நின்றுபோயிற்று.

கர்ப்பக்கிரகங்களில் அர்ச்சனைக்காகத் தேங்காயை இரண்டாக உடைத்து நைவேத்தியம் செய்யும்போது இறைவன் அவற்றைப் பலிக்கு நிகராக ஒப்புக்கொண்டு பக்தர்களை ஆசீர்வதித்து அருள்பாலிக்கிறார். அர்ச்சனைத் தேங்காயைவிட சதிர்த்தேங்காய்களிற்கும் உயிர்ப்பலிக்கும் உள்ள தொடர்பு இன்னமும் வெளிப்படை. "சதிர்" என்ற சொல்லுக்குப் பலி, தியாகம், அழிவு என்றும் பல பொருத்தமான பொருள் உண்டு.

இறைவனின்முன் சிதறுதேங்காய் உடைக்கும்போதும் எமது உடலிலுள்ள பாவங்கள் எல்லாவற்றையும் தேங்காய்மீது செலுத்தித் தேங்காயை உடைப்பதன்மூலம் எமது பாவங்கள் எல்லாவற்றையும் களைந்துவிடவும் முடிகிறது.

**நைவேத்தியப் பொருளாகத் தேங்காய்:~**

ஆண்டவனிற்கு நைவேத்தியம் செய்ய ஒரு பொருளும் இல்லாதபோது தேங்காய், வெற்றிலை, பாக்கு பழத்துடன் சேர்த்து நைவேத்தியம் செய்யலாம். இந்த அளவில் இது சிறந்த படையற் பொருளாகவும் கருதப்படுகிறது.

திருவரங்கத்தில் உள்ள அரங்கநாதர் கோவிலின் பெருமாளுக்குத் தேங்காய்த் துருவல்தான் நைவேத்தியம் செய்யப்படுகிறது. காரணம் தேங்காயை உடைக்கும்போது எழும் ஒலி பெருமாளின் சயனத்தைக் கலைத்துவிடும் என்ற காரணத்தைக் கூறுவர்.

இளம் தேங்காயை உடைக்கும்போது வரும் இளநீர் கொண்டு இறைவனை அபிடேகம் செய்யும்போது நாம் பல்வேறு சௌக்கிய பலன்களையும் அனுபவிக்க முடியும்.

இன்றும் இந்தியாவில் ஆசார, அனுஷ்டானமுடைய மேல்சாதி இந்துக் குடும்பங்களில் அன்றாடச் சமையலுக்கு உடைக்கப்படும் தேங்காய்களைக்கூட ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்தபிறகே உபயோகிக்கும் மரபு உண்டு.

விநாயகனிற்கு நைவேத்தியம் செய்வதில் உகந்ததாகக் கருதும் மோதகத்தின் பிரதானபாகம் தேங்காய்ப்பூ என்பதும் நாம் கருத்திற்கொள்ளவேண்டியது.

**தானம் அளிப்பதில் சிறந்தபொருள்:~**

தானம் அளிப்பதில் சிறந்த பொருளாகத் தேங்காய் கருதப்படுகிறது. சடங்குகளில் தேங்காய்கள், கோயில் குருக்களுக்கும், புரோகிதருக்கும் தானமாகத் தருவதில் முக்கியபொருளாகக் காணப்படுகின்றது. ஏழைகளுக்குத் தேங்காய் தானமாகக் கொடுப்பதும் புண்ணிய கைங்கரியமாகவும் கருதப்படுகிறது.

**காரிய சித்திக்குத் தேங்காய்:~**

தமிழ் நாட்டிலே திருவான்மியூரில் ஜனகல்யாண விநாயகர் கோயில் உண்டு. அங்கு நன்மைதரும் காரியம் கைகூடவேண்டும் என எண்ணுபவர்கள் இவ் ஆலயத்தின் முன்னால் உள்ள கம்பத்தில் முழுத்தேங்காயை நேர்த்திக்கடன் வைத்துக் கட்டிவிடுவார்கள். இவர்களின் காரியம் சித்தியடைந்ததும் தேங்காயை எடுத்து

உரித்துத் தேங்காயுடன் 21முறை ஆலயத்தை வலம்வந்து விநாயகனிற்கு அருச்சனை செய்வார்களாம்.

இவ்வாறு பல்வேறு அருமை, பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட தேங்காயைத் தரும் தென்னையைப் பயிரிட்டுப் பல்வேறு நன்மைகள் பல பெறுவோமாக.

**தென்னை நாட்டல்:~**

இந்துக்களின் வாழ்வியற் சம்பவங்களைச் செம்மைப்படுத்தும் நூலான தருமநீதி, ஆன்மா நரகம் செல்லாது வாழ்வதற்கு தென்னை நாட்டல் அவசியம் என்பதனை எடுத்துக்கூறியுள்ளது. அதாவது ஒரு அரசும், ஒரு ஆலும், ஒரு வேம்பும், பத்துப் புளியும், மூன்று விளாவும், மூன்று வில்வமும், ஐந்து நெல்லியும், ஐந்து மாவும், ஐந்து தெங்கும் எவராகிலும் வைத்துப் பயிர் செய்தால் அவர்களுக்கு ஒருகாலும் நரகம் இல்லை எனக்கூறியது இங்கு நோக்கத்தக்கதாகும்.

**தென்னை நடுவோம்:~**

இந்துக்களாகிய நாம் எமது சமயத்தேவைகளையும் கலாசாரத் தேவைகளையும், உணவுத் தேவைகளையும் தந்துதவும் தென்னையைத் தகுந்த காலத்தில் நாட்டி அதிக பயன்பெற்று எமது பொருளாதார வளத்தையும் மேம்படுத்துவோம். தென்னை நடுகைக்கு ஏற்றகாலம் புரட்டாதியை அண்டிய காலமாகும். இக்காலத்தில் 3அடி X 3அடி குழிவெட்டி நல்ல பசளை இட்டுக் குழியினுள் சிறந்த தென்னம்பிள்ளைகளை நட்டுப் பராமரித்துச் சிறந்த விளைவைப் பெறுவோம்.

எமது பிரதேசத்தின் எல்லா இடங்களிலும் வளரக்கூடிய தென்னையை நாட்டி எமக்கு மட்டுமன்றி எமது எதிர்காலச் சந்ததிக்கும் நன்மைகள் பல புரிவோமாக.

## சமயம் சார்ந்த வாழ்க்கை மாமனிதனாக மாற்றும்

மனித வாழ்க்கைக்கு அவரவர் சார்ந்த மத அனுஷ்டானங்கள் அவசியமானதுதான். இதனை மறந்து தற்கால நாகரிக மாயையில் மனத்தைப் பறிகொடுத்து எத்தனையோ மனிதர்கள் பகுத்தறிவை இழந்து மனித உருவில் மிருக உணர்வோடு வாழ்க்கை நடத்துவதைக் காணலாம்.

சமய வாழ்க்கை ஒரு மனிதனை நல்ல மனிதனாக நெறிப்படுத்த உதவுகின்றது. வள்ளுவப் பெருந்தகை தனது பொய்யாமொழியில் கூறியதுபோல் தோன்றில் புகழோடு தோன்றி வாழ்வாங்கு வாழ மனிதன் - மனிதனாக வாழ சமய வாழ்க்கை சரியான பாதையைக் காட்டுகின்றது. விஞ்ஞான உண்மையோடு பின்னிப் பிணைந்துள்ள அஞ்ஞானம் அகற்றும் மெஞ்ஞானம் புகட்டும் இந்துமதம் சார்ந்தவர்கள் அர்த்தமுள்ள இந்துமதக் கொள்கைகளை அறிந்து ஆன்மீக வழியில் வாழ்க்கையைத் தொடரும்போது மக்கள் மதிக்கும் மாமனிதராக உருவெடுப்பார்கள் என்றால் அது பொய்யில்லையே.

**அகந்தையைத் துறந்தால் இறையருளைப் பெறலாம்.**

உ

# இந்து வருடப்பிறப்பு

திரு சி.மு. தம்பிராசா அவர்கள்

இந்துவருடப்பிறப்பு வரலாற்றுப் பின்னணியில் சோதிட சிந்தனைகள், அவற்றின் வளர்ச்சிகள். இந்து வருடப் பிறப்பின் தோற்றம், நிகழ்வு, தொடர்புகள், பலாபலன்கள், சித்தமருத்துவ சிந்தனைகள், வாழ்வியலிற்கான கேத்திர கணித அறிவு, சைவசித்தாந்த சிந்தனைகள், பொருளியற் கல்வியியற் சிந்தனைகள் என்பன இழையோடி இருப்பதனைக் காணமுடிகிறது. இவைகள் எல்லாம் ஆழ்ந்த சிந்தனைகளைக் கொண்டவை. இந்து வருடப்பிறப்பின் தோற்றம் உலகச் சிருஷ்டியாதியோடு அமைகிறது. இதனைச் சோதிட நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. சோதிட நூல்களில் பரகிதம் ஒன்று. பரகிதத்தின் முன்னுரையில்:

"ஈசுர வாக்காக அருளிச் செய்யப்பட்ட முதனூலாகிய வேதத்திற்குக் கண்ணாக அமைந்துள்ளது சோதிடம். இது சித்தாந்தஸ்கந்தம், ஹோராஸ் கந்தம், ஸம்ஹிதாஸ்கந்தம் என்னும் மூன்று ஸ்கந்தங்களையுடையது. இவற்றுள் கிரக நட்சத்திராதிகளின் கதிகளைக் கூறுவது "சித்தாந்தஸ்கந்தம்" என்றும்;

"சித்தாந்தஸ்கந்தத்தை விரித்து விளக்கிச் செய்யப்பட்டுள்ள நூல்கள் சித்தாங்கள் எனப்படும். இவை பதினெட்டு உள. இவற்றுள் வடஇந்தியாவில் சூரிய சித்தாந்தமும், தென்னிந்தியாவில் ஆரியபட சித்தாந்தமும், ஆன்றோர்களால் அனுபவத்தில் ஆளப்படுகின்றன. ஆரியபட சித்தாந்தத்தை ஆதாரமாகக் கொண்டு நுட்பமாகச் செய்யப்பட்ட கணிதநூல்கள் வாக்கிய கரணம், கரணப் பிரகாசம், பரகிதம் என்பனவாம்" என்றும்,

"இவற்றுள் வாக்கிய கரணம் என்னும் கணிதநூல் வரருசி முனிவரால் வடமொழியில் செய்யப்பட்டுள்ளது. இது பஞ்சாங்ககணனம், ஸ்புடகணனம், சாரகணனம், கிரகணகணனம் என நான்கு பிரிவுகளை உடையது. இவ்வடமொழி வாக்கிய கணிதத்தைத் தமிழ் மக்கள் யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் பொருட்டு இற்றைக்கு ஏறக்குறைய 180 வருடங்களின் முன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அராலியில் வசித்த நடராஜ சாத்திரிகள் அவர்கள் புத்திரர் நாராயண சாத்திரிகள் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கணித சிந்தாமணி என்னும் பெயருடன் பாடியுள்ளார்" என்றும்,

இக்கணித சிந்தாமணியில் உள்ள ஸ்புடகணனமாகிய பகுதியே பரகிதம் என்னும் பெயருடன் இந்நூலாக வெளியிடப்படுகின்றது என்றும் கூறுகிறது.

முன் குறிப்பிட்டுள்ள நாராயண சாஸ்திரிகளின் முன்னோரில் ஒருவரும், தில்லைச் தீட்சித பரம்பரையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணத்தை அரசு புரிந்த கூழங்கைச் சக்கரவர்த்தியின் சமஸ்தான சோதிடராகவும் இருந்த ஒருவரின் வழித்தோன்றலுமாகிய இராமலிங்க முனிவரே இலங்கையில் இற்றைக்கு உஎஉ வருடங்களுக்கு முன்னர் ஆரியபட சித்தாந்தத்தை ஆதாரமாகக் கொண்டு முன் குறித்த வரருசி முனிவர் அருளிச்செய்த வாக்கிய முறைப்படி முதன்முதல் பஞ்சாங்கம் கணித்து வெளிப்படுத்தியவராவார்

**தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிடப் பெரிய அவமானம் வேறெதுவுமில்லை.**

எனப் பரகித நூலாசிரியர் வரலாறு கூறுகிறது. இது வாக்கிய பஞ்சாங்கம் என்று வெளிவருகிறது.

இலங்கையில் 1589இல் இராம லிங்க முனிவரால் வாக்கிய முறைப்படி பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு வந்தது. பழைய வாக்கியங்களைத் திருத்தங் களில்லாமல் உபயோகித்துக் கணிப்ப தால் ஏற்படும் கிரகநிலைகள் பிரத்தியட் சத்திற்கு ஒத்துவராமை கண்டு ஹெ. கார்த்திகேய ஐயர் அவர்கள் பத்தாண்டு களாகத் திருக்கணித அப்பியாசம் செய்து சகாப்தம் 1811 தொடக்கம் திருக்கணித முறைப்படி பஞ்சாங்கம் கணித்து வெளியிடப்பட்டு வருகிறது எனத் திருக்கணித பஞ்சாங்க முகவுரை கூறுகிறது.

யாழ்ப்பாணத்தில் இன்று வாக்கி யம், திருக்கணிதம் என்னும் இரு பஞ்சாங்கங்கள் இந்து வருடம், மற்றும் இந்து சமய நிகழ்வுகளுக்கு வழிகாட்டு கின்றன. ஓர் இயற்கை நிகழ்வு. குறிப் பிட்ட ஓர் இடத்தில் ஒரேநேரத்திற்றான் நிகழமுடியும். மேற்குறித்த இரு பஞ் சாங்கங்களும் காலக் கணிப்பீட்டில் ஒருமைப்பாடான சிந்தனைகளைக் கொண்டில, வருடப்பிறப்பு, நவராத்திரி, விநாயக ஷஷ்டி, திருவாதிரை மற்றும் திதிகள் போன்ற நிகழ்வுகள் குறித்த இரு பஞ்சாங்கங்களிலும் வேறுபட்ட காலங்களில் கணிக்கப்படுவது நாம் கண்ட உண்மை. இக்கணிப்பீடுகள் மற்றைய மதத்தினருக்கு நகைப்புக்கு இடமளிக்கின்றன. மெய்யியற் பாரம்பரியம் மிக நிறைந்த இந்து மதத்தில் இனிமேலாவது ஓர் இயற்கை நிகழ்வு ஓர் இடத்தில் ஒரே நேரத்தில் நிகழ்வதனை அவதானித்துக் கணித்துப் பஞ்சாங்கம் வெளியிடல் தவிர்க்கமுடி யாததாகும்.

வாக்கிய பஞ்சாங்கம் சூரியன் மேட ராசியிற் பிரவேசிப்பது முதல், மீன ராசியை விட்டு நீங்கும் வரையும் உள்ள காலம் சௌர வருஷம் என்று கூறுகிறது. திருக்கணித பஞ்சாங்கம் மேட ராசியின் தொடக்கமாகிய அசுவினி நட்சத்திரத்திற் சூரியன் பிரவேசிக்குங் காலந்தொட்டு, மீனராசியின் அந்தமான ரேவதி நட்சத் திரனின்றும் நீங்கும் வரையில் உள்ள காலம் சௌர வருஷம் எனச் சிறிது விளக்கமாகக் கூறுவதனைக் காணலாம்.

முன்கூறிய இரு பஞ்சாங்கங் களும் சூரியன் மேடராசியிற் பிரவேசிப் பது, மீன ராசியை விட்டு நீங்குவது என்பது திரிபுக்காட்சியாகும். அண்டவெளியிற் சூரியன் தன்னைத்தான் சுற்றிக்கொண்டு நிற்க, சந்திரன் தன்னைத்தான் சுற்றிக் கொண்டு பூமியை வலம்வரப் பூமியும் தன்னைத்தான் சுற்றிக்கொண்டும், சந்திரனையும் சேர்த்துக் கொண்டும், சூரியனை நீள்வட்டப்பாதையில் வலம் வருகிறது. பூமி தன்னைத்தான் சுற்றி முடிய எடுக்குங்காலம் ஒருநாள். பூமி சூரியனைச் சுற்றிமுடிய எடுக்குங்காலம் 365நாள் 15நாழிகை 31விநாடி 15தற்பரை எனப் பரகிதம் கூறுகிறது. பூமியினது சுழற்சி, பெயர்ச்சி, அதற்கான காலம் என்பன தற்காலம் நாம் எல்லோரும் அறிந்த அறிவியல் உண்மையாகும். முன்குறிப்பிட்ட இரு பஞ்சாங்கங்களும் சூரியன் மேடராசியிற் பிரவேசிக்கும் காலம் என்பதனையும், சூரியன் மீன ராசியை விட்டு நீங்கும் காலம் என் பதனையும்; சூரியனது கதிர்வீச்சு மேட ராசியிற் படுங்காலமும், சூரியனது கதிர் வீச்சு மீனராசியை விட்டு நீங்கும்

இறை நம்பிக்கை என்னும் சிப்பிக்குள் இருக்கும் முத்துத்தான் தொழுகை.

காலமும் எனக்கொள்வது பொருத்தமான தாகக் காணப்படுகிறது. எனவே இந்து வருடப்பிறப்பு உலகச் சிருஷ்டியாதியோடு தோற்றம் பெற்றுள்ளது எனலாம்.

பூமியின் சுழற்சி, பெயர்ச்சியி னாற் சூரியனின் கதிர்வீச்சு மேட இராசி யில் விழும் அதே இடத்தில் மறுமுறை விழ அடுத்தவருடம் ஆரம்பமாகிறது. இந்நிகழ்வே ஒவ்வொரு வருடப்பிறப்பும் ஆகிறது. இந்நிகழ்வு இயற்கை விதியாக உள்ளது. ஆதலின் இந்து வருடப்பிறப்பு இயற்கையின் தோற்றப்பாடு, விதி என் பவற்றோடு தொடர்புடையது.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய கிரகங்களோடு பூமி தொடர்புடையது. பூமி எமது உடலோடு தொடர்புடையது. ஒரு புள்ளி அல்லது ஒரு வட்டம் 360 பாகை. பூமண்டலம் 12 இராசிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒரு இராசி 30 பாகை கொண்டது. பன்னிரு இராசிகளையும், 30 பாகையாற் பெருக்கிப் பாகையாக்கி வரும் பாகையை 60 கலையாற் பெருக்கிக் கலையாக்கின் 12X30X60= 21600 கலை யாகும். இந்த 21600 கலையை முறையே 80, 60, 40, 20ஆற் பெருக்க வரும் தொகைகள் கிருத, கிரேத, துவா பர, கலி ஆகிய யுகங்களின் தனித்தனி வருடத்தொகைகள் ஆகும் எனப் பரகித பங்சாங்கப்படலம் சதுர்யுகப் பிரமாணம் கூறுகிறது.

ஒரு மனிதன் 24 மணித்தியாலம் கொண்ட ஒரு நாளில் 21600முறை சாதாரணமாகச் சுவாசிக்கிறான் என சித்த மருத்துவ மரபினர்களான யூகி முனி, வல்லாதி, திருமூலர் கூறுவர். மேலும் பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவையில் இடம்பெறும் சிவ யோகசாரம். நிசானந்த போதம் ஞான சாரநூல் சாத்திரம் என்பனவும் இதனை உறுதி செய்கின்றன. ஒருமனிதன் ஒரு நிமிடத்தில்

$$\frac{21600}{24x60} = \frac{30}{2} = 15$$

முறை சாதாரணமாகச் சுவாசிக்கிறான். பூமியானது ஒருநாளில் தன்னைத்தான் சுற்றும் வகையில் 360X60 = 21600 கலையைத் தாண்டுகிறது. ஆதலின் பூமி ஒரு நிமிடத்தில்

$$\frac{21600}{24x60} = \frac{30}{2} = 15$$

கலையைத் தாண்டுகிறது. அதா வது மனிதன் ஒரு நிமிடத்தில் 15முறை சுவாசிக்கப் பூமியானது ஒரு நிமிடத்தில் 15 கலையைத் தாண்டுகிறது. ஆதலின் பூமியின் இயக்கத்திற்கும் மனித உடல் இயக்கத்திற்கும் மேற்கூறிய தொடர்பு இருக்கிறது. இந்த வருடபிறப்புக் கிரக நிலைகள் சிலரை வெகுவாகப் பாதிக்கக் கூடும். பாதிக்கப்படுபவர்களின் நட்சத் திரங்கள் சங்கிரம தோஷம் உள்ள நட்சத்திரங்களாகும். அவற்றைப் பஞ்சாங்கங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இப்பாதிப்பில் இருந்து விலகிக்கொள்ள மருத்துநீர் தயாரித்துச் சிரசில் வைத்து ஸ்நானம் செய்யும் வண்ணம் பஞ்சாங் கங்கள் அறிவுறுத்துகின்றன.

மருத்துநீர் தயாரிக்கும் மூலிகை வகைகள் சித்த மருத்துவப் பெறுமானம் மிக்கவை. குறிப்பிட்ட மூலிகைகளோடு பால், கோசலம், கோமயம், கோரோசனை சேர்க்கப்படுவது பசுவின் மருத்துவப் பெறுமானத்தைக் காட்டுகிறது. திருக்கணிதம் பஞ்சாங்கம் மருத்துநீர் தயாரிக்கும் மூலிகைகளோடு- பச்சைக் கர்ப்பூரம் சேர்த்துக்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. மருத்துநீர் சிரசில் வைத்து ஸ்நானம் செய்யும்போது காலிற்குக் கீழும் சிரசிலும் வைக்கும் மூலிகைகளான இலைவகைகள் ஒவ்வொரு வருடப்பிறப்புக் கிரக நிலைக்கும் ஏற்றவாறு வேறுபடுவதனைக் காணலாம். இவ்வாறு அன்று அணியும் உடுபுடவைகளும் வேறுபாடான வண்ணங்களைக் கொண்டவையாகும். (தொடரும்....

சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாருமில்லை - திருமந்திரம்.

கைலையில் வாழ்ந்த சுந்தர மகரிஷி திருமூலர் ஆவார். அவர் பொதிகை மலையில் வசித்த தனது சீடர் அகத்தியரைச் சந்திக்கும் பொருட்டுத் தெற்குநோக்கிப் பயணமானார். சாத்தநூர் எல்லையை அடைந்தபோது மாட்டிடையன் மூலன் சடலமாகக் கிடப்பதையும் அதைச்சுற்றி மாட்டு மந்தைகள் அலறுவதையும் கண்டு வேதனைப்பட்டார். முழுமுதற் கடவுள் சிவபெருமானை வேண்டி, சிவனின் அருளினால் மகரிஷி தனது உடலைவிட்டு மூலனின் உடலிற் புகுந்து மேய்ப்பனாக மாறிப் பசுக்களைக் கிராமத்திற்கு ஓட்டிச் சென்றார். பசுக்கள் பெருமகிழ்ச்சியடைந்தன.

சுந்தர மகரிஷி தனது உடம்பைத்தேடி விட்ட இடத்திற்கு வந்து பார்த்தார். தனது உடம்பைக் காணவில்லை. சிவனின் செயலால் மூலனின் உடம்புடன் தொடர்ந்தும் வாழும் நிலை உண்டானது. மகரிஷி திருவாவடுதுறை சென்று ஒரு மரத்தடியில் தவத்தில் மூழ்கினார். சமாதி நிலையில் இருந்தபோது பாடிய பாடலே,

"மூலன் உரை செய்த மூவாயிரம் மந்திரங்கள் ஆயின" என்றும்

"அவனை ஒழிய அமரரும் இல்லை பிறப்பிலி இறப்பிலி உள்ளத் தொருவன் உள்ளது சோதி" எனவும்,

"சிவ சிவ என்கிலர் தீவினையாளர்" எனவும் குறிப்பிடுகின்றார் திருமூலர்.

திருஞானசம்பந்தர்,

"சிவபெருமானை அன்றி நித்தலும் சிந்தையில் தேர்வதில்லை" என்றார்.

திருநாவுக்கரசர்,

"நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவிலனே" என்றும்

சுந்தரர்,

"நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே" என்றும்

மாணிக்கவாசகர்,

"கதறியும் பதறியும் மற்றோர் தெய்வம் கனவிலும் நிலையாது"
"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே பற்றினேன் பற்றிலேன்"
"சீவம் வேண்டார் தமை நாளும் தீண்டேன்"
"உள்ளேன் பிற தெய்வம் உன்னை யல்லாது" என்றும்

சேந்தனார்

"யோக நாயகனை அன்றி மற்றொன்றும் உண்டென உணர்கிலேன்" என்றும் சிவனின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளனர்.

*-திரு க. வசந்தகுமார்-*

**பயம்தான் மிகப்பெரிய பாவம்.**

உ

# வாழ்க்கை உன் கையில்

## மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் JP அவர்கள்

ஒருவன் எங்கு செல்லுவதென்று தீர்மானிக்காமல் நடக்க ஆரம்பித்தால் எந்தவிதமான பலனும் இல்லாமல் தான் தோன்றித்தனமாகச் சுற்றிச்சுற்றித் திரிபவன் ஆவான். அதற்கு மாறாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப்போய்த் தீர வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு செயற்படுபவன்தான் நினைத்த இடத்திற்குப் போய்ச்சேருவான். ஒவ்வொரு நாளும் தான் செய்துமுடிக்கவேண்டிய காரியங்களை முன்கூட்டியே தீர்மானம் செய்துகொள்பவன் வாழ்க்கையில் நிறையக் காரியங்களை செய்துமுடித்து புகழ் பெறுவான்.

அதுபோலவே வாழ்க்கையில் தான் சாதிக்கவேண்டியது என்ன என்பதை நன்கு ஆராய்ந்து ஓர் இலட்சியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதை அடைய முழுமூச்சுடன் செயற்படுபவன்தான் வாழ்க்கையில் வெற்றி காணமுடியும்.

இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவன் குட்டையில் மிதக்கும் கட்டையைப்போன்றுதான் வீண்வாழ்க்கை வாழ்ந்துவருவான். இந்த உலகில் நாம் வாழப்போகும் காலம் மிகவும் குறுகியது. ஆகையால் ஒருவன் எல்லாத் துறைகளிலும் முதன்மையாகத் திகழமுடியாது. பொறியியல், மருத்துவம், பொருளாதாரம், அரசியல், பேராசிரியர், தொழிற்சாலை அதிபர், விஞ்ஞானி, எழுத்தாளன் போன்றவர்களால்கூட அனைத்துக் காரியங்களையும் திறம்படச் செய்ய முடியாது. தனக்கென்று ஓர் இலட்சியத்தை ஏற்படுத்திக்கொள்ளாமல் பல விதமான காரியங்களைச் செய்து வருபவன், எந்தக் காரியத்தையும் முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிடுபவனாகத்தான் ஆவான்.

உயர்ந்த இலட்சியங்களை ஏற்படுத்திக்கொண்டவனுக்குத்தான் உயர்ந்த மனிதனாக உருவாவதற்கு வாய்ப்புக் கிட்டும். ஒவ்வொருவனுக்கும் இயற்கையாகவே சில விஷயங்களில் பற்று ஏற்பட்டுவிடுகிறது. சிலருக்கு எழுத்தாளனாக வரவேண்டும் என்ற விருப்பம் இருக்கும். மற்றும் சிலர் பெரிய விளையாட்டு வீரனாக வரவேண்டும் என்று துடிதுடிப்பார்கள்.

ஒருவனுக்குத் தான் விரும்பிய காரியத்தைச்செய்யும்போது களைப்பே தோன்றுவதில்லை. அவனால் தொடர்ந்து ஆர்வத்துடன் செயற்படமுடிகிறது. வாழ்க்கையில் அற்புதங்களை படைக்க விரும்புபவர்கள் முதலில் ஓர் உயர்ந்த இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதற்காகவே உயிர்வாழ்ந்து வரும் மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### இலட்சியங்களுக்கு இந்த உலகிற் பஞ்சமே கிடையாது

“நான் தலைசிறந்த விளையாட்டு வீரனாக வந்து பல ஒலிம்பிக் பதக்கங்களைப்பெற்று, என் தாய்நாட்டிற்குப் பெருமைதேடித் தரப்போகிறேன்.

உலகத்தில் இருக்கும் அநியாயங்களை விளக்கும் சிறந்த புத்தகங்களை எழுதி, மக்களை விழிக்கவைத்து, அநியாயங் களை அகற்றி மனித இனத்தில் சந்தோஷத்தை அதிகப்படுத்தப்போகி றேன்..... பல புதிய சக்திகளைக் கண்டு பிடித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மனித குலத்தின் சந்தோ ஷத்தை உயர்த்தப்போகிறேன்.... பல புதிய மருந்துகளைக் கண்டுபிடித்துத் தற்போது மக்களை துன்புறுத்திவரும் நோய்களை அகற்றி எண்ணற்றவர்களின் கண்களிள் நீரே வராமற் பார்த்துக் கொள்ளப் போகிறேன் என்பன போன்ற உயர்ந்த இலட்சியங்களை ஒருவன் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

தன்னுடைய இலட்சியத்தைத் தேர்ந்தெடுக்கும்போது ஒருவன் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒரு வனுக்கு இதயக்கோளாறு காரணமாகச் சிறிதுதூரம் நடந்துசென்றால்கூட மூச்சு வாங்குகிறது. ஆனால் அவன் வட துருவத்திற்கு நடந்துசென்று வெற்றிக் கொடி நாட்டிவிட்டு வரவேண்டும் என்ற இலட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டால் அவனுக்குத் தோல்வியும் அவமான முந்தான் ஏற்படும்.

ஆகையினால் தன்னுடைய திறமை, அறிவு, ஆரோக்கியம் போன்ற வைகளை நன்கு ஆராய்ந்து தன்னாற் செய்துமுடிக்கக்கூடிய இலட்சியத்தையே ஒவ்வொருவரும் தேர்ந்தெடுக்க வேண் டும்.

தன் இலட்சியத்தை அட்டையில் எழுதித் தன்னுடைய அறையில் கண் களிற் படும்படியாக மாட்டினால், அதை அடிக்கடி படிக்கும்போது அந்த இலட் சியம் கால ஓட்டத்தில் அவனுடைய உயிர்மூச்சாக மாறிவிடும். மந்திரம் சொல் வதைப்போன்று தினமும் காலையிலும் மாலையிலும் தன் இலட்சியத்தைச் சொல்லிவரவேண்டும். இப்படிச்செய்யும் ஒருவனுடைய முயற்சிகள் எண்ணங்கள் போன்றவைகள் அவனுடைய இலட்சி யத்தை மையமாக வைத்துக்கொண்டு சுழல ஆரம்பித்துவிடும்.

**இலட்சியத்தை அடையத் திட்டம் தீட்ட வேண்டும்**

வெற்றிக்குச் செல்லும் அடுத்தபடி தன் இலட்சியத்தை எப்படி நிறை வேற்றுவது என்று திட்டம் போடுவதுதான். தன்னுடைய இலட்சியத்தைப் பல பாகங் களாகப் பிரித்துக்கொண்டு அவற்றைச் செய்துமுடிக்கக் காலவரம்பை நிர்ணயித் துக்கொள்ள வேண்டும்.

திட்டம் தீட்டும்போதும், கால வரம்பை நிர்ணயித்துக்கொள்ளும் போதும் சம்பந்தப்பட்ட அறிஞர்களின் உதவியை நாடவேண்டும். திட்டம்போட்டபடி அனைத் தும் சரியாக நடந்துவருகின்றனவா என்று ஒவ்வொரு மாதமும் நன்கு ஆராயவேண் டும். உங்கள் திட்டம் திட்டப்படி நடக்கா விட்டால், அதற்கான காரணங்களை ஆராய்ந்து திட்டம் வெற்றிகரமாக நடை பெறத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். எப்படியும் வாழலாம் என்ற நினைப்பினை விட்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற எமக்கே உரித்தான மரபைப்பேணி நாமும் நாடும் வாழ நல்ல இலட்சிய புருஷர்களாக எம்மை மாற்றி வாழ்வோமாக.

உ

# உலகப் புகழ்பெற்ற இணுவிற் பெருமஞ்சம்

**திரு மூ. சிவலிங்கம் அவர்கள்**

பாரெல்லாம் பறைசாற்றும் பண்டை மொழியாம் பைந்தமிழ் எமது யாழ் மண்ணில் அமுதிலும் இனியதாகப் பவனி வந்து எம்மைப் பரவசமூட்டுகிறது.

இச்சிறப்புமிக்க செந்தமிழ்போல மெய்ச்சமயமாம் சைவமும் இவற்றிற்கு மெருகூட்டும் ஆயகலைகளும் இங்கு பரவி எம்மண்ணை அலங்கரிக்கின்றன.

தூயதமிழ், நன்கு கற்றுத்தேறிய கல்விமான்களாலும், சைவசமயம் மேம்பாடுற இங்கு அமைந்திருக்கும் இருபத்தொரு பெரிய திருத்தலங்களில் உறைந்திருக்கும் தெய்வங்களில் அருளாட்சியினாலும், ஏழிசை வல்ல தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் மற்றும் பல்லிசைக் கலைஞர்களினாலும் இணுவில் கிராமம் புகழ்பெற்றது. செந்தமிழும், சைவமும், கலைகளும் மேலோங்கியதால் மற்றைய ஊர்களுக்கு இணையற்றது- இணையிலி- இணுவில் என மருவிய சிறப்புப் பெயரைக் கொண்டது.

ஆரம்ப காலத்தில் புலவர், பண்டிதர், வித்துவான் போன்ற சிறப்புடைய கல்விமான்களின் அயராத முயற்சியாலும், நாவலர் பெருமானின் உந்தலினாலும் செந்தமிழ் சிறப்புற்றது. எண்ணற்ற திருத்தலங்களாலும் இங்கு தோன்றிய சித்தர்கள், ஞானிகள், அருளாளர்களின் அரவணைப்பினாலும் சைவசமயம் ஆசார நெறிப்படி யாவரையும் அனுசரிக்க வைத்தது. கோயில்களை நாடுவோரின் பக்தியைப் பரவசமடையச் செய்யும் மங்கள இசை மற்றும் பல்லிசை விற்பன்னர்களால் பல்கலையும் பிரகாசமடைந்தன. சைவமும் தமிழும் இசைக்கலையும் பின்னிப் பிணைந்து மக்களைத் தூய சிந்தனையாளர்களாக, பகுத்தறிவாளர்களாக, பண்பாளர்களாக, மேதைகளாக மிளிர வைத்தது. அறநெறி வாழ்கிறது. அறிவொளி வீசுகிறது.

இணுவையூர் மக்கள் தமிழறிந்த கல்விமான்களாக, சைவம் காக்கும் ஆசாரசீலர்களாக, இங்கு வாழ்ந்திடும் ஏழிசை வளர்க்கும் கலைஞர்களாக இருந்தபோதும் எம்மவரின் சிறப்பான உயிர்காக்கும் தொழில் விவசாயமாகும். இதனால் இன்று யாவரும் பெருமையுடன் வாழ்கின்றனர்.

இச்சூழலில் விவசாயப் பெருங்குடியில் தோன்றிய சுப்பிரமணியம் என்னும் வாலிபன் ஏட்டுக்கல்வியை நாடாது குடும்பச் சொத்தாகிய ஆநிரைகளை இணுவில் காரைக்கால் பகுதியிலுள்ள புல் நிலங்களில் மேய்த்துவந்தார். ஒரு நாள் இவரது மதிய உணவு வரப் பிந்தியது. பசியால் வாட்டமுற்றார்.

ஒரு மரநீழலில் உறங்கிவிட்டார். காரைக்கால் பதியில் குடிகொண்டுள்ள மாரியம்பாள் தமது பிள்ளையின் பசியை நீக்க எண்ணித் தாமே நேரில் வந்து சுப்பிரமணியத்திடம் திருவமுது தந்தருளினார். திருவமுதுண்ட சுப்பிரமணியம் பெருஞ் சித்தரானார். சித்தரானவர் சிவப் பணியுடன் பொதுப்பணியாகத் தம்மை நாடிவருவோரின் உடல், உளப் பிணிகளையும் போக்கினார். மேலும் ஊர் மக்களை

**இன்றே செய்யக்கூடியதை நாளைவரை தள்ளிப்போடாதீர்கள்.**

நல்வழிப்படுத்தி அறவாழ்வு வாழவும் வகைசெய்தார். இவரின் ஆன்மீகத் தொண்டினால் நலிவுற்ற மக்கள் பலர் அவரைப் பணிந்து நலமடைந்தனர்.

சந்நியாசியாரான சுப்பிரமணியம் தமது குலதெய்வமான இணுவில் கந்தக் கோட்டத்துக் கந்தப்பெருமானை வணங்கி அத்தலத்தில் வேண்டிய அரும்பணி களையும் மேற்கொண்டார். தமது தூய பணியினால் முருகப்பெருமானை வியக்க வைத்தார். இதனால் மகிழ்ந்த எம் பெருமான் தமது மீளா அடியவரின் கன வில் தோன்றித் தமக்கு உல்லாசமாக வீதியுலா வருவதற்கான மஞ்சம் ஒன்றை அமைத்துத் தருமாறு அன்புக் கட்டளை யிட்டார். மேலும் சிறப்பான திருமஞ்சத் தின் மாதிரி வடிவமைப்பையும் சித்திர வடிவமாகக் காண்பித்தார். சிவநெறி யையே சிந்தித்திருந்த பெருஞ்சித்தர் முருகப்பெருமான் காண்பித்த மஞ்சத்தின் மாதிரி உருவமைப்பைத் தன் சிந்தை யில் அழியாத ஓவியமாகப் பதித்துக் கொண்டார். திருவருளை எண்ணிப் பரவச மடைந்தார்.

பொழுது புலர்ந்ததும் முருகப் பெருமானின் சித்தப்படி அமைய இருக் கும் மஞ்சத் திருப்பணியை எண்ணி இன் புற்றார். நாள்தோறும் காலையில் பெரி யாரிடம் தமது பிணியகற்றும் நோக்கில் வரும் அன்பர்கள் குழுமியிருந்தவேளை, தமக்கு முருகனிட்ட பணியையிட்டுக் கூறி மகிழ்ந்தார். மேலும் திருப்பணி தொடங்கும் சுபதினத்தையும் தேர்வு செய்தார். இப்பணிக்குத் தமது பூரண ஆதரவைத் தருவதற்கு அனைவரும் உறுதிபூண்டனர். குறிப்பிட்ட திருமஞ்சத் திற்கான தரமான முதிய மரங்கள் யாவும் குறுகிய காலத்துள் பொதுமக்க ளின் அன்பளிப்பினாலும் அடியார்களின் சரீர உதவியினாலும் உரிய இடத்தில் குவிக்கப்பட்டன. இப்பாரிய நிர்மாண வேலையை நிறைவேற்ற யாரை நிய மிப்பது எனச் சந்நியாசியார் விசன முற்றார். தமது மாறாத உடற்பிணியைப் பெரியாரின் கருணையினாற் சுகங்கண்ட இஸ்லாமியரான செய்யது என்பவர் பெரி யாருக்கு உதவ முன்வந்தார். தென்னிந் திய தேவகோட்டையைச் சேர்ந்த முத்து ராக்கப்ப ஆசாரியார் சிற்ப வேலைகளில் கைதேர்ந்தவரெனக் கூறி இக்குறிப்பிட்ட திருமஞ்சவேலையை வந்து தொடங்கு மாறு திருமுகம் அனுப்பவும் சித்தமானார்.

சிலநாட்கள் சென்றபின் முருகப் பெருமான் சந்நியாசியாரின் திருக்கோலத் தில் தேவகோட்டையில் உள்ள முத்து ராக்கப்ப ஆசாரியாரின் இல்லம் ஏகினார். பெரியவரின் சிவப்பொலிவைக் கண்ட ஆசாரியார் அவரை வணங்கி வரவேற்று உபசரித்தார். அப்போது பெரியார் செய் யது அனுப்பிய திருமுகம் கிடைத்ததா? என வினவியதுடன் இணுவில் கந்த சுவாமி கோயிலுக்கான சித்திரகூட மஞ்ச மொன்று அமைக்கவேண்டும். உதவியாட் களுடன் வேண்டிய தொழிற் கருவிகளை யும் கொண்டுவந்து பணியை உடன் ஆரம்பிக்குமாறு கேட்டிருந்தார். மேலும் இணுவிலுக்குச் செல்லும் மார்க்கத்தை யும் தெரிவித்ததுடன் தான் ஆறுபடை வீடுகளுக்குச் சென்று தரிசித்துவிட்டு வருவதாகவும் கூறி மறைந்தார்.

ஆசாரியார் பெரியாரின் சிவக் கோலத்தையும் உரையாடலையும் கண்டு பேருவகையடைந்தார். வேண்டிய ஒழுங்குகளுடன் இணுவிலை வந்தடைந்

தார். தென்னிந்தியாவில் தம்மைச் சந்தித்த பெரியார் ஆறுபடை வீடுகளுக்குச் சென்று அதிவிரைவில் இணுவிலை அடைந்த அற்புதத்தை வியந்த ஆசாரியார் தமது உரையாடலில் நினைவு கூர்ந்தார். தாம் இந்தியா செல்லாத போதும் முருகப்பெருமான் தமது திருமஞ்சப் பணிக்காக ஆசாரியாரிடஞ் சென்று அவர்களை அழைத்துவந்த பெருங் கருணையினைப் பெரியார் தமது அன்பர்களிடையே பக்திமேலீட்டினால் உரையாடி மகிழ்ந்தார்.

ஞான பண்டிதனின் திருவருளும், பெரியாரின் சித்து மகிமையும், பொதுமக்களின் பொருளுதவியும், பக்தர்களின் சரீர உழைப்பும் உலகில் பிரசித்திபெற்ற 48 அடி உயரமுடைய சித்திரகூடமான பெருமஞ்ச வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றன. பெருஞ்சித்தர் தமக்கு இட்ட பணியை 1910ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இணுவில் கிழக்கில் மஞ்ச வேலைகள் தொடங்கிய இடத்தில் முருகன் வீற்றிருக்கும் பீடமளவுக்கு வேலைகள் வந்ததும்,. மஞ்சத்தடியிலிருந்து கந்தசுவாமி கோயிலுக்கு இழுத்துச் செல்லப்பட்டது. கந்தசுவாமி கோயிலின் தென்கிழக்கு வீதியில் நிற்கும் மருதமரத்தின் அண்மையில் மிகுதி வேலைகள் தொடர்ந்து நிறைவுபெற்றன. 1912ஆம் ஆண்டு முருகப்பெருமானின் திருமஞ்ச வெள்ளோட்டம் நடைபெற்றது.

கலைக்களஞ்சியமாக, அற்புத சிற்ப ஓவியமாக விளங்கிய இப்பெருமஞ்சத்தை நேரில் வந்து தரிசித்த சிற்பக் கலைஞர்கள், ஸ்தபதிகள், ஓவியர்கள், மேல்நாட்டு அறிஞர்கள், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் யாவரும் இது போன்ற அழகிய அமைப்பை இதுவரை எங்கும் காணவில்லையென்றும், இது ஓர் அற்புதமான படைப்பு என்றும் பாராட்டினர். மதிநுட்பமான அமைப்புமுறைகள், சிற்பக்கலையின் உயர்ந்த இலக்கண நெறிக்கமையவே செதுக்கப்பட்டுள்ளன. மனவுறுதியுடன் இறைசிந்தனையில் பதித்தே செய்யப்பட்டுள்ளன. இவ்வுருவங்களின் அமைப்பு அவற்றிற்கு தக்கவாறு உடல்பாவனை, தகவுப் பொருத்தம், போதிய இடம், ஒயில், இணைப்பு, ஒப்புமை, ஏற்றம், இறக்கம் எனப்படும் அட்ட இலக்கணங்களும் அமையவே செய்யப்பட்டுள்ளன.

இப்பெருமஞ்சம் 48 அடி உயரமாக இருந்ததால் மேலதிகமான ஆட்டம் ஆடியது. இதனால் உயரம் குறைக்கப்பட்டு இப்போதுள்ள நிலையில் அழகுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இப்பெருமஞ்சம் உலாவரும்போது அடித்தளத்திலிருந்தே ஓர் அற்புதமான அலங்கார அசைவு காணப்படுகிறது. இந்த ஒய்யாரமான அசைவு இப்பெருமஞ்சத்துக்கே உரிய தனியழகாகும். அலங்காரக் கந்தன் ஆவலுடன் அமைப்பித்துக் குஞ்சரி வள்ளியுடன் அருகமர்ந்து பவனிவரும் அற்புதக்காட்சி யாவரையும் கவரக்கூடியது.

இப்பெருமஞ்சத்தின் தனிச் சிறப்பை, அதன் அழகை, அதன் பெருமையை உணர்ந்தும், கேட்டும், கண்டும் அனுபவித்த அமரரான மஹா வித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள் இந்த மஞ்சத்திற்கென்றே ஒரு பாடல் பாடி முருகனுக்குச் சமர்ப்பித்தார். அப்பாடலை இணுவில் மேற்கில் வாழும் ஓர் இசைக்குடும்ப உறுப்பினர்கள் தென்னிந்தியப் பாடகி நித்தியஸ்ரீ அவர்களின் குரலில் ஒலிநாடாவாக

வெளியிட்டனர் அப்பாடல் பின்வருமாறு,

பல்லவி

மூவுலகிலும் காணமுடியுமோ எங்கள் தேவன்
இணுவை அழகன் கந்தன் திருமஞ்சப் பவனிக்காட்சி
(மூவுலகிலும் காண....)

அனுபல்லவி

காவலாய் வள்ளிகுஞ்சரி அருகில் அமர்ந்திருக்கச்
சேவற்கொடி வேலும்ஏந்திச் சேந்தன் வரும் மஞ்சக்காட்சி
(மூவுலகிலும் காண....)

சரணம்

சிற்பமும் சித்திரமும் சீர்பெருகும் வண்ணம்
அற்புதப் படைப்பு ஒன்றே அகிலமே வியந்துநிற்கும்
பொற்பதி இணுவையூரில் தைப்பூச நாளில் கந்தன்
நற்கதி தந்தருள நாடிவரும் மஞ்சக்காட்சி
(மூவுலகிலும் காண....)

மங்கள வாத்தியம் பொங்கி இசைத்திடும்
எங்கும் நூலோர் ஓதும் எழில் வேதம் ஒலித்திடும்
சங்கு முழங்கிடும் சதுர்மறை விளங்கிடும்
குஞ்சரி, வள்ளியுடன் குகன் மஞ்சப் பவனிக்காட்சி
(மூவுலகிலும் காண....)

இப்பெருமஞ்சம் வருடத்தின் தைப்பூச நன்னாளிலும், பெருவிழாக் காலத்தின் பன்னிரண்டாம் திருவிழா விலும் ஆறுமுகப்பெருமான் வள்ளி, குஞ்சரியுடன் சர்வாலங்காரங்களுடனும் வீதியுலா வருவது அதியற்புதமானது. தைப்பூசத் திருமஞ்சத் திருவிழாவை ஆரம்பகாலத்தில் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து தரிசிப்பர். அக்காலத்தில் இரட்டை மாட்டுவண்டி களே பிரதான வாகன வசதியாகும். இவ்விழாவிற்கு வருகைதருவோரின் மாட்டுவண்டிகள் நாற்றிசையிலும் வீதி யோரம் நெடுந்தூரம் விடப்பட்டிருக்கும் காட்சியும் சிறப்புடையதாகும். பிரயாணக் கட்டுப்பாடுகளற்ற அக்காலத்தில் தென்னிந்திய மக்கள் கடல்வழியே வல்வெட்டித்துறையூடாக வந்து இவ்வரிய திருமஞ்சக்காட்சியழகைத் தரிசித்ததாக வும் எமது மூதாதையர்கள் கூறக் கேட்டுள்ளோம்.

முருகப்பெருமானின் வரைபட விளக்கத்துடன் பெரியாரின் விருப்பப்படி இப்பெருமஞ்சத்தின் அடித்தளத்தில் அண்ட சராசரங்கள் அனைத்தும் பல பிரிவுகளாகப் புராண இதிகாச சம்பவங் கள், உலகின் படைப்பை உணர்த்தும் சிற்ப அலங்காரங்கள் மூலம் அலங்கரிக் கின்றன. சிறப்பாகப் பவனிவந்த இப்பெரு மஞ்சம் காலப்போக்கில் பாவனையற்று முடங்கி நின்றது. திருமஞ்சத்தின் பவனியைக் காணாததால் துயரடைந்த பொதுமக்கள் பலரின் வேண்டுகோளின்

பேரில் இணுவில் தெற்கில் வாழ்ந்த கல்கிபீடித் தொழிலதிபர் அமரர் திரு சி. சின்னத்துரை அவர்களும், அமரர் திரு அ. இராசநாயகம் அவர்களும் எடுத்த பெருமுயற்சியால் பல இலட்ச ரூபா செலவில் முன்னிருந்த கம்பீரமான நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

மறுசீரமைக்கப்பட்டு மேலும் பல சிறப்புக்களுடனும், நல்ல அழகிய வண்ணக்கோலத்துடனும் உலாவரும் திருமஞ்சம் முருகனால் வகுக்கப்பட்டு அவனருளாலே அமைக்கப்பட்டது. "தவமும் தவமுடையார்க்காகும்" என்னும் முதுமொழிக்கொப்ப, இறைவனருளால் தோன்றி பெருஞ்சித்தராகி இல்லறம் நாடாது முருகனின் அன்னையினால் அருள்ஞானம் பெற்றவர் சுப்பிரமணியம் என்னும் பெரிய சந்நியாசியார். இவரை ஓர் கருவியாக்கித் தமது திருவிளையாடலைக் காண்பித்தவர் இணுவில் கந்தப் பெருமான்.

இச்சூழலில் தென்கீழ் திசையில் இரு பெரிய குளங்களும் சூழப் பல்லின மரச்சோலை. சோலையிலே குயில்கள் கீதம் பாடும். இப்பைந்தமிழ்ச்சோலையிலே பச்சை மயில் நடனம் ஆடும். இச்சோலை நடுவே அமைந்ததுதான் இணுவில் கந்தக்கோட்டத்துக் கந்தப் பெருமானின் ஆலயம். பல சிறப்புக்களுடைய, மெருகூட்டும் அரும்பெரும் கலைக்களஞ்சியத்தை எமக்கென நிறைவேற்றிய பெரிய சந்நியாசியாரும் அவர்தம் பணியான பெருமஞ்சமும் செந்தமிழின் அங்கமான கல்வி, கலை, சமயம் யாவும் ஒருங்கமைந்து இணுவில் என்ற கிராமத்தின் சிறப்பு தமிழ்கூறும் நல்லுலகின் முதுமையான சொத்தாகும்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி இன்புறுவோமாக"

---

## வாசகர் உள்ளத்திலிருந்து

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் மாதமலர் ஞானச்சுடர் கிடைக்கப்பெற்று விபூதிப் பிரசாதம் பெற்று இறைவனை நினைத்துப் பூசியும் வணங்கியும் வருகிறேன். ஞானச்சுடரில் வெளிவரும் ஞானக்கட்டுரைகளின்மூலம் முருகன் திருவருளையும் அற்புதங்களையும் வாசித்துப் பேரானந்தம் அடைகின்றேன். நேரில் வரமுடியாவிடினும் ஞானச்சுடர்மூலம் மானசீகமாக சந்நிதியில் நிற்பதாக உணரவைக்கும் புண்ணியம் பெறுகின்றோம்.

குறிப்பாக விசாக அபிடேகமும் மறந்து பின் திருவருளால் நினைவூட்டப்பெற்று விசேட அபிடேகம் நடந்ததும், கதிர்காம யாத்திரையும் திரு குமாரசாமி ஐயர் அவர்களின் அனுபவமும் முன்பு சுவாமி அவர்கள் சைக்கிள்மூலம் பிற இடங்கள் சென்று அரிசி சேகரித்து வெள்ளிக்கிழமை அன்னதானம் செய்த அனுபவம், கவிதைகள் எல்லா ஞானக்கட்டுரைகளும் தனிமையில் வாடும் வயோதிபராகிய எம்போன்றவர்கட்கு பெரிய அருள்துணையாகும் திருவருளால் பல்லாண்டு ஞானச்சுடர் எங்கும் பிரகாசித்து எல்லோரையும் ஞானவாழ்வு வாழ வழிகாட்டப் பிரார்த்திக்கின்றோம்.

*திரு ஆ. இராசரத்தினம்*
*பம்பலப்பிட்டி.*

**தவறை ஒப்புக்கொண்டு அதைத் திருத்திக்கொள்பவன் வெற்றிபெறுவது நிச்சயம்.**

உ

# குருபக்தி

திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறிய பெரியோர்கள் "தந்தை, தாய், குரு" என வரிசைப் படுத்தியதன் மூலம், ஆசிரியரை மூன்றா வது நிலையில் வைத்துப்போற்றுமாறும், "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்றும் கூறியுள்ளனர். குரு, உபாத்தியாயர், கணக்காயர், ஆசான் முதலிய பல்வேறு பெயர்களால் ஆசிரியர் அழைக்கப்படு கின்றார். அவரை, வாழும் சமூகம் உயர் நிலையில் வைத்துப் பூசிக்கிறது. நல்லா சிரியரின் இலக்கணங்களை நன்னூலாசிரி யர் தெளிவுபட எடுத்துரைத்துள்ளார். எந்த வித்தையைக் கற்றுக்கொடுத் தாலும் அவர்கள் ஆசிரியர்களே என்பதும், "குருவில்லாத வித்தை பாழ்" எனக் கூறுவதும் நாமறிந்தவைகளே. ஆசு+ இரியன் என்பதன் பொருள் குற் றம் களைபவன் என்பதாகும். முற்காலத் தில் பாடசாலை என்ற அமைப்பு உரு வாகவில்லை. கல்வியைப் பெறுவதற்குக் குருவினை நாடிச்சென்று, அவருடன் உடனுறைந்து, அவருக்குப் பணி விடைகள் செய்து நாளிலும் பொழுதிலும் குரு- சீட முறையிற் கற்க வேண்டியிருந் தது. குருவும் தன்னிடம் வரும் மாணவர் களுள் தகுதியும் பக்குவமும் உள்ளவர் களையே தேர்ந்தெடுத்துச் சீடர்களாக ஏற்றுக்கொண்டு, கல்வியறிவு ஊட்டுவார். குருவின் முன்னால் எந்த அந்தஸ்த் துள்ளவராயினும் சமம்தான். ஆசிரியருக் கும் மாணவருக்குமான உறவு புனித மானது. ஆசிரியரின் வாக்கு, வேதவாக்கு. இவையெல்லாம் இன்றைய உலகில் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய் விட்டனபோல் தெரிகிறது.

"எழுத்தறியத் தீரும் இழி தகைமை; தீர்ந்தோன் மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்; மொழித்திறத்தின் முட்டறுத்து, முதனூற்பொருளுணர்ந்த நல்லோன்; கட்டறுத்து வீடு பெறும்" என்பது தொல்காப்பியச் சூத்திர விருத் திப் பாடலாகும். இதன்மூலம் கல்வியறி வானது, முத்தியின்பத்தைத் தரும் எனப் படுகிறது. இதனாலேயே ஆசிரியன் தெய் வம் போன்று கருதப்பட்டான்; தனது மாணாக்கரின் நன்மையை நாடிச்செயற் பட்டான்; சுயநலமற்றுப் பொதுநலத்தோடு கல்விப்பணியைக் கடவுட் பணியாகச் செய்தான். கடினமான பயிற்சிகளினூடு குருவிடம் கற்றுத்தேறிய மாணவர்கள், புடம்போட்ட தங்கமாகப் பிரகாசித்தார் கள். எமது இதிகாச, புராணங்கள் குரு பக்தியின் மேன்மையினைப் பல கதை கள் மூலம் விளக்கியுள்ளன. வெகுசன இலக்கியங்களாக இவை திகழ்ந் துள்ளன. துரோணாச்சாரியாருக்குத் தனது கட்டை விரலினைத் துண்டித்துக் குரு தட்சணையாகக் கொடுத்தான் மகா பாரதத்து ஏகலைவன்.

உபமன்யு என்பவனின் கதை மிகவும் பக்திபூர்வமானது. அவனது குரு வாக விளக்கியவர் சுயோதநிகம்பர் என்பவர். மாணவரான உபமன்யு, யாச கத்தினால் ஈட்டிவரும் பொருட்களைத் தன் குருவிடம் அப்படியே கொண்டு

வந்து கொடுப்பான். குருவோ அவனுக்கு எதுவும் உண்ணக்கொடுக்கமாட்டார். ஆனாலும் அவன் உடல் தளரவில்லை. அதற்கான காரணத்தைக் குரு கேட்டார். அதற்கு உபமன்யு, "நான் இரண்டாம் முறை யாசகம் செய்து சாப்பிடுகிறேன்' என்றான். அப்படிச் செய்யக்கூடாது எனக் குரு தடுத்தார். அதன் பின்னரும் அவனது உடல் தளர்வின்றி ஆரோக்கியமாகக் காணப்பட்டது. மீண்டும் காரணத்தைக் குரு கேட்க, உபமன்யுவும், பசுக்களின் பாலைக் கறந்து குடிக்கிறேன்' என்றான். அதையும் குரு தடுத்துவிட்டார். பின்னரும் அவனுடல் தளராமை கண்டு குரு காரணம் கேட்க, அவனோ கன்றுக்குட்டிகளின் கடைவாயிலிருந்து வரும் நுரையைச் சாப்பிடுவதாகக் கூறினான். அதனையும் குரு தடுத்துவிட அவனும் காட்டிலுள்ள எருக்கலம் இலைகளைச் சாப்பிட்டான். அதனால் அவனது இரு கண்களும் பார்வையிழந்து விட்டன. எதிர்பாராத விதமாக ஒருநாள் நீர் வற்றிய குளத்தில் குருடனான உபமன்யு விழுந்துவிட்டான்.

மறுநாள், உபமன்யுவைக் காணாத குரு, சில மாணவர்களையும் அழைத்துக்கொண்டு, கவலையுடன் தேடிச்சென்றார். "உபமன்யு நீ எங்கிருக்கிறாய்"? எனப் பெருங் கூக்குரலிட்டார். "நான் இவ்விடம் ஒரு கிணற்றில் வீழ்ந்து விட்டேன்; எருக்கலமிலைகளைச் சாப்பிட்டமையால் எனது கட்பார்வை போய் விட்டது" என்றான் உபமன்யு. உடனே குருவானவர், தேவர்களின் வைத்தியர்களான அஸ்வினி குமாரர்கள்மீது துதியொன்றினைப் பாடவும், அவர்கள் உபமன்யுமுன் தோன்றி ஒருவித அதிரசத்தை உண்ணக்கொடுத்து, இதைச் சாப்பிட்டவுடன் உன் கண்கள் குணமாகிப் பார்வை கிடைத்துவிடும் என்றனர். அத்தகைய நிலையிலும் உபமன்யுவானவன் "என் குருநாதருக்குச் சமர்ப்பணஞ் செய்யாது எதனையும் உண்ணமாட்டேன்" எனப் பிடிவாதஞ் செய்தான். அவனது குருபக்தியின் மேன்மையைக் கண்ட அஸ்வினி குமாரர்கள் அவனுக்குக் கட்பார்வையைக் கொடுத்தது மல்லாமல், அவனைக் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தும் விட்டனர். குருவும் அவனுடைய குருபக்தியின் வலிமை கண்டு வியந்து அருள்பாலிக்க, உபமன்யுவோ கற்காமலேயே சகலவித்தைகளிலும் சிறந்தவனானான்.

இந்தக் கதையானது உபமன்யுவின் மனோவலிமையை உணர்த்தி நிற்கிறது. சோதனை செய்த குருவே, அவனின் சாதனைகளுக்குத் துணை நின்றார். எனவே ஆசிரியர் என்பவர் மாணவர்களின் வாழ்வின் நலம் நாடிச் செயற்படுபவர்களாக விளங்குதல் அவசியம். ஆசிரியனின் அறிவொளியினால் உலகம் பிரகாசிக்க வேண்டும். இன்று பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக் கழகம் வரையில் ஆசிரியரின் பணி விரிந்து கிடக்கிறது. அவனை மனிதனாக, மாண்புடையவனாக, சமூக நலன் விரும்பியாக மாற்றும் வல்லமை ஆசிரியருடையதாகிறது.

நல்லதோர் ஆசானை எக்காலத்திலும் மாணவன் மறக்கமாட்டான்.. இன்றைய காலகட்டத்தில் புனிதமான ஆசிரியத்துவத்திலிருந்து பலர் வழுவிவிடுகின்றனர். மாணவர்களும் அவர்களை மதித்து நடக்கத் தவறிவிடுகின்றனர். ஆசிரியனின் தன்னலமற்ற சேவை, ஒரு சமூகத்தை சமுதாயத்தை, தேசத்தை,

முழு உலகினைக் கல்வியறிவிலும் பண்பாட்டறிவிலும், மனித மேம்பாட்டிலும் உயரச் செய்கிறது. ஆசிரியன் எப்போதும் கற்பவனாக இருத்தல் வேண்டும் என்பார் டாக்டர் ராதாகிருஷ்ணன். எரியும் மெழுகு வர்த்தியினாற்றான் ஆயிரம் தீபங்களை ஏற்றிவைக்க முடியும் என்பார் பிளேட்டோ. சமூகத்திற் காணப்படும் பல்துறையாளர் களையும் ஏதோவொரு வகையில் ஆசிரியனே உருவாக்குகிறான். ஆசிரியப்பணி எல்லை கடந்தது.

எனவே, பண்பு, அன்பு, பக்தி, பணி, செய்ந்நன்றியுணர்வு, பகுத்தறிவு, தேசப்பற்று, இரக்கம் ஆகிய நற்பண்புடையவர்களாகத்தாம் விளங்குவதோடு, தமது மாணவர்களையும் அத்தகையவர் களாக உருவாக்குவதே ஆசிரியனின் மேலான கடமை எனலாம். குருபக்தியுடன் செயற்படுவதே மாணவரின் மேலான கடமை எனலாம்.

## அமைதியினைத் தருவாயே!

ஆற்றங்கரை அமர்ந்தவனே ஆறுமுகனே
அடியவர்தம் குறைதீர்க்கும் குமரோனே
கூற்றமென வந்தசூரன் உடல்கிழித்து
குற்றமிலா அமரர்துயர் களைந்தவனே
ஏற்றமிகு வாழ்வுதனை இழந்துநாமே
ஏதிலியர் போலிங்கே வாழ்கின்றோமே
மாற்றமிலா வன்செயலை மாளச்செய்து
மண்மீது அமைதியினைத் தருவாயே!

அன்னதானக் கந்தனென பெயரெடுத்தாய்
அடியவர்தம் பசிப்பிணியை நீக்குதற்காய்
உன்னதமாய் ஆச்சிரமம் நிர்மாணித்தாய்
உருவத்தில் சுவாமிகளாய் வடிவெடுத்தாய்
தென்னகத்தில் ஆறுபடை வீடுகொண்டாய்
தெள்ளுதமிழ் அவ்வைக்கு நீயுரைத்தாய்
இன்னமும் திருவுள்ளம் இரங்காயோ
இன்னல் களைந்தெமைக் காப்பாயே!

வேலெடுத்து வினைதீர்க்கும் வேலவனே
வெம்பகையை வேரோடு அழிப்பவனே
சேலெடுத்த மைவிழியாள் தெய்வயானை
செங்கமாகக் கரம்பிடித்த செந்தில்குமரா
பாலெடுத்துக் குடம்குடமாய் அபிஷேகம்
பாங்குடனே நாள்தோறும் செய்திடுவோம்
மேலெடுத்து வான்வழியே வீசும் குண்டால்
மக்கள் மடிவதனைத் தடுக்காயோ....?

*வட அல்வை சின்னராஜ மன்னனார் அவர்கள்*

ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப்பெரிய பணக்காரன்.

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ்மந்திரம் கட்டுரைத்தொடர்- 18

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

திருமூலர் திருமந்திரத்திலே பல வகையான யோகங்களைப் பற்றிப் பேசுகிறார். அவைகள் எல்லாம் ஒவ்வோர் எல்லையைக் காண தாம் கண்ட சிவ யோகம் என்பது எல்லா யோகக் கட்டளை களுக்கும் மேலாக விளங்கவேண்டு மென்று கருதி அதனை அமைத்தருளி யிருக்கிறார். அந்தச் சிவஞானயோக நெறியில் நின்று திருமூலர் பெரும்பாலான விசயங்களை அருளிச் செய்துள்ளார். திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ள விசயங் கள் அனைத்தையும் அறிவினால் மட்டு மன்றி நம் அனுபவத்தினாலும்தான் தெரிந்துகொள்ள முடியும். நான்காம் தந் திரத்திலே அருச்சனை என்ற பகுதியைத் தொடர்ந்து நவகுண்டம் என்ற பகுதி வருகிறது.

நமது திருக்கோயில்களிலே நடைபெறுகின்ற மஹாகும்பாபிஷேகம், தீட்சை ஆகிய கிரியைகளில் நவ குண்டம் அமைத்து அக்கினி காரியம் செய்யப்படுவது வழமை ஆகும். நவகுண் டத்திற்கு உரியவை பற்றி அதிலே செய்யப்படுகின்ற வேள்வியைப்பற்றி, அவற்றின் இன்றியமையாமை பற்றி, அந்த வேள்வியின் பயனைப்பற்றி அதை வெற்றிகரமாக செய்துமுடிக்கின்ற ஆன் மாக்கள் பெறுகின்ற இன்ப நலங்கள் பற்றி விரித்துரைக்கும் பகுதியாக நவ குண்டம் காணப்படுகிறது. உலகப் பொருள்கள் எண் வகைப்படும் என்றே சிவாகமங்கள் கூறுகின்றன.

"நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்"

என்றே மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடு கிறது. இந்த எண்வகைப் பொருள்களை நடாத்துகின்ற இறைவன் அவற்றுக்கு மேலாக நிற்பான். அவன் விளங்குகின்ற இடம் ஆகாசமாகும். அந்த ஆகாசம் ஜடாகாசமாகாது சிதாகாசம் ஆகும். இதனைத் தாயுமான சுவாமிகள் சிற்பர வெளி எனக் குறிப்பிடுகின்றார்.

ஜடாகாசத்தில் நிலவுகின்ற ஏனைய நான்கு பூதங்களையும் சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய மூன்று பொருள்களையும் ஜடாகாசத்தையும் சேர்த்து இந்த எட்டுப் பொருள்களை நடாத்துகின்ற இறைவனை வழிபடும் நெறியே சைவசமயம் ஆகும். இவற்றை நோக்கி அமைக்கின்ற குண்டமே நவ குண்டம் எனப்படும். நவகுண்டம் என்று சொல்லப்படுவதில் அக்கினியை வளர்த்து ஆகுதிப்பொருட்களைச் சொரிந்து வழிபடும் வழிபாட்டுமுறை யாகம், யக்ஞம் என்றும் தமிழில் வேள்வி என்றும் அழைக்கப் படும். மகோற்சவ காலங்களில் ஆலயங் களில் இறைவன் வெளிப்படும் இடங்க ளாக பிம்பம், தம்பம், கும்பம் ஆகிய மூன்றும் கூறப்படுகிறது. இங்கே கும்பம் என்று குறிப்பிடப்படுவது யாக கும்பத் தையே ஆகும். யாகக் கிரியைகளில் நாள்தோறும் அக்கினி காரியம் நடைபெறுகிறது.

அழகிய வீட்டுக்கு இணையான பள்ளிக்கூடமே இல்லை.

கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு (ஈசானம்), ஈசானத்திற்கும் கிழக்குத்திசைக்கும் நடு ஆகிய ஒன்பது திசைகளில் குண்டங்கள் அமைத்து அக்கினி வழிபாடு புறத்தே செய்யப்படும். இந்த அக்கினியின் தன்மையை யோக பவித்திரத்தினால் உள்ளே வாங்கி உள்ளேயுள்ள அறிவின் மயமாக இருக்கிற அக்கினியோடு கற்பித்து இரண்டின் தன்மையும் ஒன்றாகும் தன்மையே ஞான நலம் எனப்படும்.

சைவசமயம் சிவனையே முழு முதற் கடவுள் எனக் குறிப்பிடுகிறது. திருமூலரும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் குறிப்பிடுகிறார். அன்பு, அறிவு, ஆற்றல்களையுடைய சிவன் முக்கண்ணன் என்று அழைக்கப்படுவான். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றுமே முக்கண் என்று குறிப்பிடப் படும். சிவனுடைய ஆற்றலாகிய வலக்கண் ஞாயிறு என்றும் அன்பாகிய இடக்கண் சந்திரன் என்றும், அறிவாகிய நெற்றிக்கண் அக்கினி என்றும் அழைக் கப்படும். அத்தகைய முக்கண்ணனே எட்டுத் திசைகளிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான். இதனை, "எண் தோள் முக்கண் எம்மானே" எனத் திருவாசக மும் குறிப்பிடுகிறது. எல்லா வகைக் கணங்களுக்கும் எம்பெருமானே தலை வன் ஆவான். உயிர் ஆகிய ஆன்மா பக்குவம் அடையும்பொழுது சிவம் ஆகிவிடும்.

முக்குணன் தானே முழுச்சுடராயவன்
அக்கணன் தானே அகிலமுண்டவன்
திக்கணனாகித் திகையெட்டும் கண்டவன்
எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே

வடமொழியிலே உள்ள வேத சிவகாமக் கருத்துக்களை தமிழிலே கூறும் தனி நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரம் ஒன்றே தமிழில் உள்ள சிவாகம நூலாகும். சிவாயநம என்ற பஞ்சாட்சர மந்திரத்தில் 'சிவ' என் னும் பதியும் நம என்னும் பாசமும், ய என்னும் பசுவும் ஆகிய முப்பொருளும் அடங்கியுள்ளது. திருமந்திரம் முப் பொருள் உண்மையை விளக்கும் ஒப் பற்ற நூலாகத் திகழ்கிறது. திருமந்திரத் தில் நான்காம் தந்திரத்தில் சத்திபேதம் (திரிபுரை சக்கரம்) என்ற பகுதி கூறப் பட்டுள்ளது. சக்கரம் என்ற வடசொல் தமிழிலே சக்கிரம் என்று வழங்கப் படுகிறது.

பிரணவ மந்திரமாகிய ஓங்காரத் தைப்பற்றி ஆராய்ந்தால் திரிபுரை சக் கரத்தின் உண்மை விளங்கும். சிந்தை யாலே சிந்தித்து வாயாலே ஒலிக்கும் முறையை விட்டு உணர்வாலே ஓங் காரத்தை உணர்தல் வேண்டும். மனத் தாலாவதே பிரணவ தியானம் ஆகும். சிவத்தை உணர்தல் சிந்தைக்கும் வாக்குக்கும் செய்கைக்கும் உண்டோ? உணர்விற்கே உரியது; உணர்வினால் உணரவேண்டும். ஒன்றைச் சிந்தை யாலும், சொல்லாலும், செயலாலும் எட்டவே முடியாது. தியானம் என்பது இறைவனை நீள நினைதல் ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை "நீள நினைந்தடியேன் உமை நித்தலுங்

கைதொழுவேன்" எனப் பாடியருளினார். நீள நினைதலுக்கு தாரணையும் அதற்குப் பிரத்தியாகாரமும், அதற்குப் பிரணாயாமமும், அதற்கு ஆசனங்களும், அதற்கு இயம நியமங்களும் வேண்டும்.

"தொல்காப்பியத்திற்கு உரை செய்த நச்சினார்க்கினியர் மனத்தை இறைவன்பால் நிலைநிறுத்தலே தியானம் என்பதை

"நிறுத்திய அம்மனம் நிலை திரியாமல்
குறித்த பொருளொடு கொழுத்துதல் நினைவே"

என்று குறிப்பிடுகிறார். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்து தானே இறைமயமாகி நிற்கும் நிலையாகிய சமாதி நிலையினை

ஆங்கனம் குறித்த வாய் முதற் பொருளொடு
தான் பிறன் ஆகாத் தகைவது சமாதி எனக்குறிப்பிடுகிறார்.

மூன்றாம் தந்திரம் அஷ்டாங்க யோகத்தை விளக்க நாலாம் தந்திரம் சிவயோகத்தை விளக்குகிறது. இது யோக நிர்வானத்தைச் சார்ந்தது. இதில் பிரணவ தியானம் அஜபா மந்திர ஜபம், சக்ரதியானம் முதலிய நுண்பொருள்கள் விரித்துரைக்கப்படுகின்றன.

ஹடயோகம், ஆன்மயோகம், ஞானயோகம், சிவயோகம் என யோக வகைகளின் பரிணாம வளர்ச்சிப்படிகள் அமைந்துள்ளன. உடலைத் தன்வசப்படுத்தும் வாயிலாக உயிர்ப்படக்கம் ஏற்படுத்தும் முறை ஹடயோகம் எனப்படும். உடலையும் உயிரையும் தனித்தனியாக உணர்ந்து பிறவற்றின் (உடல் முதலிய வற்றின்) தொடர்பு தவிரச்செய்து ஆன்மாவாகிய தன்னை அறிந்து கொண்டு தானேயாயிருத்தல் ஆன்மயோகம் எனப்படும். ஆன்மா தனக்குள் இருக்கும் சிவஞானத்தை உணர்ந்து அதனைக் கூடி அதுவேயாக இருத்தல் ஞான யோகம் என்றும், அந்தச் சிவ ஞானத்தால் சிவம் என்னும் பரம்பொருளை உணர்ந்து அச்சிவயோகமாக இருத்தல் சிவயோகம் என்றும் அழைக்கப்படும்.

உடம்பும் உயிரும் கூடுவதாலேயே நாம் பிறப்பு எடுக்கின்றோம். அது தேகயோகம் எனப்படும். உடம்பும் உயிரும் பிரியும் இறப்பு தேகவியோகம் என்று அழைக்கப்படும். உடம்போடு கூடிய உயிர் அதனின்று பிரியவேண்டும். பிரியும் முறையில் வேறுபாடுகள் உண்டு. அவற்றுள் இறப்பதும் ஒருமுறை. அதனின் வேறான முறையில் பிரிவதையே சமய நூல்கள் கூறுகின்றன. அத்தகைய பிரிவை உடம்பிலிருந்து கொண்டே செய்யப்பழக வேண்டும். மூச்சுக் காற்றைத் தொடராது தனித்திருக்கப் பழக வேண்டும். மும்மலங்களின் வேறாகியிருக்க வேண்டும்; தன்னில் வேறாதல் வேண்டும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் அகந்தை ஒழியத் திருவருளுடன்கூடி அதில் அடங்கி இருத்தல் வேண்டும். இதனையே "ஊனினை நீக்கி உணர்பவர்க்கல்லது தேனமர் பூங்கழல் சேரவொண்ணாதே" எனத் திருமந்திர மாலையில் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

உலகியல் பந்தங்களில் இருந்து நீங்கி ஆன்மா இறையருளைப் பெறுவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளைச் சைவசமயம் குறிப்பிடுகிறது. இவற்றில்

தியானம் யோக வகையைச் சேர்ந்தது. சக்தியை வழிபடும் புறப்பூசையில் ஸ்ரீ சக்ரம் முதலிடம் பெறுகிறது. சக்ர தியானம் அகப்பூசைக்கு உரியது. நான் காம் தந்திரத்திலே அஜபா யோகம் முதலிலே கூறப்பட்டுள்ளது. அஜபா மந்திரத்தினால் அனவாத தாண்டவ தரி சனம் பெறலாம். இது நிகழும் திருவம் பலத்தைக் காணலாம். திருவம்பலச் சக்கரமும் திரிபுரை சக்கரமும் தெரியும். இந்த இரண்டு சக்கரங்களும் சிதம் பரத்தில் இன்றும் காணப்படுகின்றன. ஒன்று திருவம்பலமாகிய சிற்றம்பலத் திலும் மற்றது தேவி கோயிலாகிய சிவ காமி அம்பாள் ஆலயத்திலும் உள்ளன. பதஞ்சலி முனிவர் அருளிய சிதம்பர பூஜா விதியில் இவை காணப்படுகின்றன.

சக்திபேதம், திரிபுரை சக்கரம் என்னும் தலைப்பிற்குரிய பொருள் சக்திபேதத்துள் ஒன்றான திரிபுரையின் சக்ரம் என்பதாகும். சிவகாம சுந்தரியே ஸ்ரீ மகா திரிபுர சுந்தரி, மகா திரிபுர சுந்தரியின் வடிவம் சத்+ சித்+ ஆனந்தம் என்பவற்றின் இணைவே ஆகும். அங்கிங் கெனாதபதி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நிறைந்திருக்கும் அருள் வடிவமே திரிபுர சுந்தரி எனப்படும். அம் மகாதேவியின் இடம் திரிபுரம் எனப்படும். அதனால் அத்தேவியைத் திரிபுரை என்றனர். மூன்று கூடம் உடைய ஸ்ரீ சக்ரம் திரிபுரை என்றும் கூறப்படுகிறது. லலிதா சகஸ்ர நாமத்தில் திரிபுரைக்குப் பல பெயர்கள் கூறப்பட்டுள்ளன. திருமந் திரத்தில் உள்ள திரிபுரைச் சக்கரம் திருவம்பலச் சக்கர வரிசையில் உள்ளது.

திருமூலர் திரிபுரையைத் "தானா அமைந்த அம்முப்புரம்" எனக் குறிப்பிடு கின்றார். இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்றையுமே இத்திரிபுரம் என்பது குறிக்கிறது. பராசக்தியே ஞானம், கரு மம், இச்சை ஆகிய மூன்று வடிவங் களில் காட்சி தருகிறாள். திரிபுரையின் நிறம் பொன்னிறம், செந்நிறம், வெண் ணிறம் ஆகிய மூன்று நிறங்களில் காணப்படுகின்றன. இந்த மூன்று வடிவங் களும் கல்வி, போகம், முத்தி என்பவற் றைக் குறிக்கும் வடிவங்களாகும். கலை மகள் கல்வியையும், திருமகள் செல்வத் தையும் உமை முத்தியையும் அளிப் பாள்.

தானா அமைந்தவ முப்புரம் தன் இடைத்
தான் ஆன மூஉரு ஓர் உருத் தன்மையன்
தான் ஆன பொன் செம்மை வெண்ணிறத்தாள் கல்வி
தான் ஆன போகமும் முத்தியும் நல்குமே

திரிபுரை ஆகிய பராசக்தியை உணரவேண்டின் உள்ளொளி காணும் முயற்சி வேண்டும். உள்ளொளி சேரும் நெறியில் ஒழுகித் திரிபுரையைக் கண்டு கொள்ளல் வேண்டும். சிவத்தை ஒளிசேர் நெறியிலே ஒழுகி அடைய வேண்டின் சிவசக்தி பிரகாசத்தை அனுபவித்தல் வேண்டும். ஓங்கார மந்திரத்தினால் திரி புரையை அறியலாம் என்பதை "ஓங்காரி என்பால் அவள் ஒரு பெண்பிள்ளை" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். ஓங்காரத்தினால் அன்றி மற்ற எதனாலும் திரிபுரையை அறியமுடியாது. அத் தேவியை உள்ளே ஓங்காரத்தால் உற்று உணர்ந்து அவளே உணர்வு, உணர்வே அவள் என்னும் உண்மையைத் தவறாது

கடைப்பிடித்தல் வேண்டும். திரிபுரை தியானத்தின் முடிந்த பயன் இதுவே ஆகும் என்பதை

ஒன்றாக என்னுள் புகுந்து உணர்வாகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடங்கையானே

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

திரிபுரை ஞான சக்தியாக இருந்து அபரஞானம் பரஞானம் இரண்டும் தருகின்றாள். கிரியையால் ஞானம் கைகூடும். "கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்றே சிவப்பிரகாசமும் குறிப்பிடுகிறது. திரோதான சக்தியே போகம் செய் சக்தியாக ஆன்மாக்கள் உலக போகங்களை அனுபவிக்க வழிசெய்கிறது. பின் அது பராசக்தியாகி ஆன்மாக்களிடம் மலபரிபாகத்தை ஏற்படுத்துகிறது. மலபரிபாகம் ஏற்பட்டதும் திருவருள் சக்தி ஆன்மாவில் படியும். அடியார் இணக்கம் சத்திநிபாதத்தை வளர்க்கும். அடியார்களிடம் உள்ள பக்குவ ஞானம் நம்மை மலவாதனை தாக்காமல் தடுத்து ஆண்டவன் திருவடி நீழலில் இணைந்து இன்புறச் செய்யும். (தொடரும்...

## கோலம் ஏன் போடுகிறோம்...?

பசுஞ்சாணி கிருமிநாசினி. அது கரைத்து வாசலில் தெளிக்கப்படும்போது, கிருமிகள் வீட்டுக்குள் நுழையாமல் இருக்க வழிசெய்கிறது. காலை வேளையில் சூரியனின் கதிர்கள் சாணம் தெளிக்கப்பட்ட வாசலில் பட்டு வீட்டுக்குள் வரும்போது நல்ல ஆரோக்கியத்தைத் தருவதாக அமைகிறது.

சாணம் தெளித்து அரிசி மாவில் கோலம்போட்டு பளிச்சென்று இருக்கும் வாசலில் லக்ஷ்மிதேவி அடியெடுத்து வைக்கிறாள் என்பது நம்பிக்கை. கோலம்போட உபயோகிக்கப்படும் அரிசிமாவு சிற்றுயிர்க்கு உணவாகும்.

கோலத்தில் வைக்கப்படும் புள்ளிகளும் அதில் உள்ள நெளிவு சுழிவுகளும் அதைப்போடும் பெண்ணின் மனநிலையை அடையாளம் காட்டும். குனிந்து கோலம் போடும்போது நம் அவயவங்களுக்கு வேலை கொடுக்கிறோம். இடுப்பு, பாதம், கால், கைகளுக்கும் பயிற்சி கொடுக்கிறோம். பெண்களுக்கு மணமானபின் குழந்தைப் பேற்றுக்கு இது மிகவும் உதவும். வயதான காலத்தில் மூட்டுவலியைத் தவிர்க்கவும் உதவும்.

இப்படித் தீய சக்திகள் அண்டாமல் காப்பது, உடலுக்கு ஆரோக்கியம் அளிப்பது, சிற்றுயிர்களுக்கு உணவளித்து இரட்சிப்பது, இறை சக்திகளை அருள்பாலிக்க அழைப்பது, வீட்டிற்கு அழகு சேர்ப்பது என கோலம் போடுவதனால் பல நன்மைகள் உண்டு. அதனாலேயே நம் முன்னோர்கள் இதனைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

உ

# இறப்பை எண்ணி.....

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

இறப்பை எண்ணிப்பார்க்கும் போது நாம் வாழ்ந்த வாழ்க்கையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். "எப்படி வாழ்ந் தோம்? எப்படி வாழ்கின்றோம்?" என்று எமக்குள்ளேயே சிந்தித்துப் பார்ப்பது அவசியம். நாம் எம்மைப்பற்றியோ எமது வாழ்வைப் பற்றியோ சரியாக எடைபோட முடியாதுதான்.

'அப்படியல்ல' என்று நீங்கள் கருதவுங்கூடும். ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒருவர் தன்னையோ மற்றவரையோ முழுமையாக அறிந்து, புரிந்து சரியான முடிவிற்கு வரமுடியாது என்றுதான் கருதுகிறேன். ஒருவரைப்பற்றி ஒரே கருத்தை சிலரேனும் சொல்கிறார் களா? இல்லையே. நான் நல்ல குணம் என்று கூறுவதை நீங்கள் ஒப்புக்கொள் ளாது அதிலொரு குறையிருப்பதைக் கூறுவீர்கள். இவ்வாறு சரியாக ஒரு முடிவிற்கு வரமுடியாதிருப்பதால் யாருமே எதையும் பூரணமாக அறிந்துகொள்வ தில்லை என்றுதான் கூறவேண்டும்.

'நாவுக்கரசர் சரியைத்தொண்டு செய்து, பற்றற்றவராக, பக்தனாக சிறந்த வாழ்வு வாழ்ந்தவர்' என்பது என் கருத்து. ஆனால் அவர் என்ன கூறுகிறார் தெரி யுமா? "ஐந்து பூதங்களும் தம்மைத் துன் புறுத்த அவற்றிற்கு ஆற்றமுடியாது போனேன். பல குற்றங்களைச் செய்தேன். மனிதர் வாழ்க்கை சிறப்பற்றது. இப்பிறவி கேடானது. *சீச்சீ!* காலன் வரும்போதும் அறியமுடியாது'' எனக்கூறுகின்றார். அவரது வாழ்க்கை பற்றிய என் கருத்தை அவரே ஏற்கவில்லை பாருங்கள்.

நடுவிலாக் காலன் வந்து
நணுகும் போது அறிய வொண்ணா
அடுவன அஞ்சு பூதம்
அவை தமக்கு ஆற்றலாகேன்
படுவன பலவும் குற்றம்
பாங்கிலா மனிதர் வாழ்க்கை
கெடுவதிப் பிறவி *சீசீ*
கிள ரொளிச் சடையி னீரே.

என்பது அவரது தேவாரம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களே ஐம்பொறிகளாகவும் ஐந்து புலன்களாகவும் உள்ளதாகக் கூறுவார்கள். ஆகவே ஐம்புலன்களின் துன்புறுத்தலை பூதங்களின் துன்புறுத் தலாகக் கூறியிருக்கலாம். "பிசாசு பூதம்" என நாம் கூறும் அஞ்சத்தக்க பூதங் களாகவும் அப்புலன்கள் அவருக்குத் தோன்றியிருக்கலாம். இரு கருத்துக் களையும் பொதிந்து "அடுவன அஞ்சு பூதம் அவை தமக்கு ஆற்றலாகேன்'' எனப் பாடியுள்ளார். "*சீ சீ*" என பிறவியை வெறுத்துப் பாடும் அவர் "நடுவிலாக் காலன் வந்து நணுகும்போது அறிய வொண்ணா'' என்பதையே முதலில்

பாடுவதால் அதுவே அவரது கருத்தில் முந்தி நிற்பதாகக் கருதவேண்டியுள்ளது.

யமன் ஒருநாள் வருவான் என்பது தெரியும். ஆனால் அவன் வரும் நாளோ நேரமோ எமக்குத் தெரிவதில்லை. ஒருவர் இறக்கும்போது இப்படியிருந்தால் நல்லது என நாம் கருதலாம். எமது எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் எப்போதும் ஈடேறுவதில் லையே, எனவே இறப்புவரும் நேரம் தெரிந்தால் கூட நாம் எண்ணுவதுபோல் நடப்போம் என்று கூறமுடியாது.

நாம் ஏதாவது தவறாகச் செய்து விட்டோமென்றால் சிலர் "நீ இப்படிச் செய்துவிட்டாய், நானென்றால் அப்படிச் செய்திருப்பேன்" என்று கூறுவார்கள். அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிச் செய்திருப்பார்கள் என நீங்கள் நம்புகிறீர களா? நிச்சயமாக இல்லை. "நானென் றால் அடித்திருப்பேன். முகத்திற்கு நேரேயே குற்றங்களைச் சுட்டிக்காட்டி யிருப்பேன். திட்டியிருப்பேன்" என்று கூறியவர்கள் அதேபோன்ற சந்தர்ப்பங் களில் கைகட்டி, மௌனித்து இருந்து விட்டு "நேருக்குநேர் என்னென்று....." என்று ஒரு இழுப்புடன் பதில்கூறி நான் பார்த்திருக்கிறேன். "ஏனப்பா அப்படிக் கூறினாய், பேசாமல் இருந்திருக்க வேண்டும்" என்று அபிப்பிராயம் கூறிய வர்கள் அதைவிட அதிகமாக வைது தீர்ப்பதையும் கண்டிருக்கிறேன்.

மரணம் வரும்போது இறை சிந்தனை வேண்டுமெனவே நாம் கருது கிறோம். எனவே அந்த இறுதிக்கணத்தில் இறைவனைத் தியானிக்க வேண்டு மென்றே விரும்புகிறோம். இதனாலேயே முதுமையுற்றோ, நோயுற்றோ மரணப் படுக்கையிலிருப்பவரின் அருகேயிருந்து தேவாரம் பாடுகிறார்கள். மூலமந்திரத் தைக் காதிலே கூறுகிறார்கள். ஆனால் மரணம் வரும் கணத்தில் முன்னர் விரும் பியிருந்தாலும் இறைசிந்தனை வராது வேறு எண்ணங்கள் வரவுங்கூடும். எம் மனங்களை இறைவன்பாற் செல்லாது ஈர்த்தெடுக்க எத்தனையோ விடயங் களுள்ளனவே. இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்களோ? யானறியேன். ஆனால் நாவுக்கரசர்ப் பெருமான் அந்தக்கணத் தில் தான் இறைவனை மறந்துவிடக் கூடும் என ஐயப்பட்டார்.

கூற்றுவன் எப்படியிருப்பான்' அற நெறி தவறாதவன். கடமையைச் சரி யாகச் செய்பவன். இப்படியிருப்பவன் கடூரமானவனாக இருக்கவேண்டுமா? இப்படி எத்தனை அதிகாரிகளை நாம் பார்க்கிறோம். அவர்கள் சாதாரணமாகத் தானே இருக்கிறார்கள். விலங்குகள், பறவைகள், மீன்கள் என்று கொன்று குவிப்பவர்களெல்லாம் சாதாரணமாகத் தானே தென்படுகிறார்கள். ஆனால் யமனுக்கு மட்டும் பயங்கர உருவை எம் கற்பனையில் கொடுத்திருக்கிறோம். மரணத்தின்மேல் எமக்குள்ள வெறுப்பை, பாவம்! அந்த யமனின் உருவத்திலே காட்டியிருக்கிறோம். யமன் என்றொருவன் என்னிடம் வந்தால் கருணையுடன் கூடிய உருவமாகத்தான் வருவான் என்று எனக் கொரு கற்பனை. அது நிஜமாக நேர்ந்தால் அதை எழுத முடியாதென்பது தான் கவலை.

ஆனால், அப்பரடிகளும் அந்தக் கூற்றுவனைக் கொடியவனாகவே உரு வகிக்கிறார். "கொடிய கூற்றுவன் சீற்றத் தோடு வந்து சிவந்ததோர் பாசத்தை என்மேல் வீசும்போது அவனைக் கண்டு

**ஒருவன் தன்னைத்தானே காக்கவேண்டுமானால் சினத்தினைக் காக்கவேண்டும்.**

உம்மை மறக்கினும்" என இறைவனுக் குக் கூறுகிறார். அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். கண்முன் கொடிய கொடூரத்தோற்றம் பாசம் வீசிப் பிடிக்கிறது. அக்கணம் என்ன நடக்கும்? மனம் பதறி அங்கலாய்க்கும். தப்ப வழி தேடும். மேலே குண்டுவீச்சு விமானம் சுற்றியவேளை கீழே இருந்த அனுபவம் எமக்கிருக்கிறதல்லவா? இறைவனை அப்போது மறக்கவும் நேரலாம். எனவே தொடர்ந்து அப்பரடிகள் இறைவனிடம் "நான் மறந்தாலும் நீ என்னைக் கைவிடாதே. என்னைக் குறிக்கொள்" என முற்கூட்டியே விண்ணப்பஞ்செய்து வைக்கிறார். யமன் வரும்நேரம் தெரியாது வந்த நேரத்தில் இறைவனை மறக்கவும் நேரலாம். எனவே,

தோற்றம்கண் டான்சிரம் ஒன்றுகொண்
டீர்தூய வெள்ளெருது ஒன்று
ஏற்றம்கொண் டீர்எழில் வீழி
மிழலை இருக்கை கொண்டீர்
சீற்றங்கொண்டு என்மேற் சிவந்ததோர்
பாசத்தால் வீசிய வெம்
கூற்றங்கண்டு உம்மை மறக்கினும்
என்னைக் குறிக் கொண்மினே.

என்ற அவரது தேவாரத்தை நாமும் ஓதி இறைவனிடம் அதே விண்ணப்பத்தைச் செய்வோம்.

---

## ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் ஆதரவு அளித்தோர்

திருமதி மயில்வாகனம் மூலம் (நவிண்டில்)
திரு ம. சண்முகதாசன் குடும்பத்தினர்
அவுஸ்திரேலியா இரண்டு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபா.

திரு சிவ முத்துலிங்கம் மூலம் கனடா இந்துசமயப் பேரவை அடியார்கள்
ஒரு இலட்சம் ரூபா.

சிட்னி முருகன் ஆலய அறங்காவலர் சபை அடியார்கள்
அவுஸ்திரேலியா ஒரு இலட்சம் ரூபா

ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அடியார்கள்
இலண்டன் ஒரு லட்சம் ரூபா.

---

சதா புறம் கூறுகிறவன் மறுபிறப்பில் ஊமையாகப் பிறப்பான்.

உ

# வருடாந்த வைகாசிப் பெருவிழா 2008

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினால் மேற்கொள் ளப்பட்டுவரும் வைகாசிப் பெருவிழாவானது வழமைபோன்று இவ்வருடமும் வைகாசி விசாக தினத்தையொட்டி 16.05.2008 வெள்ளிக்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளுடன் மிகவும் பக்திபூர்வமாகவும் எளிமையாகவும் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் வாராந்த நிகழ்வினை நடாத்த வந்திருந்த யாழ் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளது வில்லிசை, சொற்பொழிவு, பக்திப்பாடல் முதலிய நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வைகாசிப் பெருவிழா நிகழ்வு ஆரம்பமாயின.

நல்லைக்குருமணி சோமசுந்தர பரமாசசாரிய சுவாமிகளின் அருளுரையுடன் ஆரம்பமாகியது. விழாவில் அவர் தமது அருளுரையில் 16.05.1993ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வருடமும் வைகாசி மாதத்தில் வரும் விழாவானது தொடர்ந்து நடைபெற்று வருவது போற்றுதற்குரிய விடயம் எனவும் கூறியதோடு அன்றைய தினம் விழாவில் கலந்துகொண்ட மாணவ மாணவிகள் பயனடையக்கூடிய வகையில் பல நற்சிந்தனைக் கருத்துக்களை முன்மொழிந்தார்.

இத்துடன் விழாவிற்கு சிறப்புரை ஆற்ற வருகை புரிந்த பேராசிரியர் திரு அ. சண்முகதாஸ் அவர்கள் 22.05.1994ஆம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப் பெருவிழாவின்போது "ஞான பண்டித தமிழ்க் குரிசில்" என்ற சிறப்பு விருதினை வழங்கி தன்னைக் கௌரவித்தமையை நினைவுகூர்ந்தார். அந்த வகையில் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளுக்கும் தூய்மையான செயற்பாட்டுடன் நடைபெற்று வருவதற்கு சந்நிதி வேற்பெருமானின் அருள் இங்கே வியாபித்திருப்பதையும் மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களுக்கு எடுத்தியம்பியதோடு ஏதோ ஒரு வகையில் வருடாவருடம் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்வுகளில் தானும் பங்குபற்றுவது இந்தச் சந்நிதிவேற் பெருமானின் திருவருளே என்று வியந்து கூறினார்கள்.

மேலும் விழாவின் இறுதி நிகழ்வாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் ஒன்றாக வறுமைக்கோட்டிற்குட்பட்ட கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

மாணவியான செல்வி த. ரசிதா என்பவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு K.P. ஆனந்தநடேசன் அவர்கள் வழங்கினார்கள்.

விழாவின்போது வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்க நிர்வாகத்தினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக கற்றல் உபகரணங்களை திரு திருமதி மனோண்மணி சண்முகதாஸ் அவர்கள் வருகை புரிந்திருந்த முன்பள்ளி நிர்வாகத்தினரிடம் கையளித்தார்கள்.

மேலும் விழாவில் இறுதியாக 63 நாயன்மார்களின் குருபூசை நிகழ்வுடன் விழா இனிதே நிறைவுற்றது.

வைகாசிப் பெருவிழாவிற்கு வருடாவருடம் பங்களிப்பினைச் செய்த பெருந்தகைகள் இவ்வருடமும் நேரடியாக ஆச்சிரமத்திற்கு வருகைபுரிந்து தங்களது பங்களிப்பை மிகவும் செம்மையாக நிறைவேற்றினார்கள்.

## விழாவிற்கு பங்களிப்பு செய்த அன்பர்கள

| | | |
|---|---|---|
| திருமதி சுரேந்திரநாதன் தவமலர் இளை. அதிபர் | மயிலியதனை | 2000. 00 |
| திரு ச. வைத்தியநாதக்குருக்கள் பிரதமகுரு | கந்தவனம் ஆலயம் | 1500. 00 |
| திரு த. கணேசமூர்த்தி (வங்கி) | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| Dr. சி. கதிரைவேற்பிள்ளை | கரவெட்டி | 1000. 00 |
| திரு ம. ஸ்ரீகாந்தன் | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| திரு V. அரியராசா J.P | தொண்டைமானாறு | 1000. 00 |
| திரு மா. சிவஞானசுந்தரம் (நில அளவையாளர்) | இடைக்காடு | 1000. 00 |
| திரு க. சிவக்கொழுந்து J.P | உடுப்பிட்டி | 5000. 00 |
| திரு வ. இராசையா கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |
| திரு செ. நவரத்தினராசா (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| திரு A.S.S. இராமச்சந்திரன் மாலிசந்தி | அல்வாய் | 1500. 00 |
| திரு ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் | கரணவாய் | 1000. 00 |
| திரு பாக்கியரெத்தினம் இரும்பகம் | சங்கானை | 2000. 00 |
| திருமதி ஜெகதீஸ்வரன் தர்மவதனி | லண்டன் | 10000. 00 |
| திரு க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 1000. 00 |

உ

(தொடர்ச்சி....

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்




அன்னதானக்கந்தனாம் சந்நிதியான் வீற்றிருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அடியார்களுக்கு பசிதீர அன்னதானம் வழங்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்தவிடயமாகும். இதே போன்று ஆலயத்தில் விஷேட பூசைகள், அபிஷேகங்கள் செய்வோருக்கு வேறு ஆலயங்களில் இல்லாத அளவிற்கு நிறைவாகப் பிரசாதங்கள் வழங்கப்படும் நடைமுறையும் இங்கே பின்பற்றப்பட்டு வருகிறது.

இதேபோன்றுதான் சந்நிதியில் இடம்பெறுகின்ற நித்திய பூசையின் பொழுதும் பூசகர்கள் நிறைவான நைய்வேத்தியம் படைத்து பூசையை மேற்கொண்டு வருவதுடன் பலவகைப்பட்ட நைவேத்தியங்களைப் படைத்து சந்நிதியானைப் பரவசமாக்குவதும் இங்கே இடம்பெறுகின்ற இன்னொரு சிறப்பு அம்சமாகும். சந்நிதியான் கதிர்காமம் போகும்பொழுது உழுத்தம்பிட்டும், திரும்பி வரும்பொழுது பயறும் இளநீரும், சனிக்கிழமைகளில்

திருமுழுக்குப் பூசையின்பொழுது சோறு கறி என பலவகைப்பட்ட நைவேத்தியங் கள் படைக்கப்படுகின்றன.

கலியுகக்கந்தன் முருகப்பெரு மான் ஆற்றங்கரையில் தோன்றி ஆட் கொண்ட மருதர் கதிர்காமரது பரம்பரை யில் வந்த பூசகர்களே இன்றும் இங்கே பூசையினை நடாத்தி வருவதனால் அவர் கள் சந்நிதியானை தம்மை வாழவைக்க வந்த குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வருகின்ற அதேநேரம் சந்நிதியானை தமது உறவுக்குரியவர்போலவும் கருதிச் செயற்படுவதையும் நாம் காணமுடிகிறது.

நாம் நமது உறவுக்குரியவர் களுக்கு பல்வேறு உணவுப்பண்டங் களை வழங்கி அவர்களை மகிழ்விப்பது போல பூசகர்களும் சந்நிதியானுக்கு பல்வேறுவகைப்பட்ட பண்டங்களை பூசையின்பொழுது நைவேத்தியமாகப் படைத்து அவனது உள்ளத்தை குளிரச் செய்து அதனூடாகத் தாம் திருப்தியடை கின்ற ஒரு உலகியல் வழக்கத்தினை யும் காணமுடிகின்றது.

மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்த பூசகர்கள் சந்நிதியானுக்குப் பூசையை மேற்கொண்டு வருவதுமட்டு மன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் உரிமையும் இன்றும் அந்தப் பூசகர் களுக்கே சொந்தமாக இருந்து வருகிறது. மருதர் கதிர்காமருக்கு 4 ஆண்களும் 2 பெண்களுமாக மொத்தம் ஆறுபிள்ளை கள் இருந்துள்ளனர். இதனால் ஆலயத் தின் உரிமை உட்பட தனது சொத்துக் களை ஆறுபேருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்துள்ளார். இந்த ஆறுபிள்ளை களில் ஒருவராகிய வேலுப்பிள்ளை என்பவர் ஆலய உரிமையில் அந்த ஆறில் ஒரு பங்கை தனது நாலு ஆண் பிள்ளைகளுக்குத்தான் பிரித்துக் கொடுத் துள்ளார். இதனால் பல நாட்களுக்கு ஒருமுறைதான் ஒருவருக்கு ஒரு கோயில் முறை கிடைக்கும்.

இவ்வாறு ஒவ்வொருநாளும் ஒவ்வொருவருக்கு ஆலயத்தின் உரிமை மாறும்பொழுது அன்றைய தினம் அல்லது அன்றைய நாள் யாருக்கு உரிமையாக உள்ளதோ அந்தப் பூசகர் அன்றைய தினப்பூசைக்கு உரியவராகின் றார். மேலும் நாம் குறிப்பிட்டதுபோல மருதர் கதிர்காமருடைய சந்ததியினர் இன்று மேலும் விரிவடைந்து சென்று கொண்டிருப்பதால் சட்டப்படி பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு அந்த ஆலயம் உரிமையாக உள்ளது.

இவ்வாறு பலநூற்றுக் கணக் கானவர்கள் இன்று ஆலயத்திற்கு உரிமையாளர்களாக இருந்த பொழுதி லும் அனைவரின் செயற்பாடுகளும் நிறைவாகவே நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. காரணம் இவர்கள் எல்லோரும் சந்நிதியானை மெய்யன்புடன் விசுவாசிப் பது மட்டுமன்றி சந்நிதியானுக்கு சேவகம் செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தை தமக்கு கிடைத்த பெரும்பேறாகவும் கருதிச் செயற் பட்டு வருகின்றனர்.

மூலஸ்தானம் உட்பட ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் அனைத்துப் பகுதி களும் புதுப்பிக்கப்பட்டு புதுமெருகுடன் புனரமைக்கப்பட்டு 07.04.2008இல் கும்பா பிஷேகமும் மற்றும் மண்டலாபிஷேகச் செயற்பாடுகளும் திருப்தியாக நிறை வடைந்துள்ளன. 07.04.2008இல் நடை பெற்ற கும்பாபிஷேக தினத்தில் சந்நிதி யானுக்கு நித்தியபூசைகளை நிறை

**எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் ஒன்று தெரியும். அதுதான் ஒன்றும் தெரியாது.**

வேற்றுகின்ற அனைத்து பிரதம பூசகர்களும் மற்றும் மருதர் கதிர்காமரின் வழித்தோன்றல்களாக தற்பொழுதும் ஆலயச்சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அனைவரும் அந்த கும்பாபிஷேக வைபவத்தில் ஒன்றாகக் கலந்து ஒற்றுமையாகச் செயற்பட்டதையும் நாம் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது.

மனித சுபாவத்திற்குள்ள போட்டி, பொறாமைகள், விருப்புவெறுப்புக்கள் இன்று எங்கும் மிகத் தாராளமாக இடம் பெற்றுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் உரிமையாளர்களான நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றாக ஒற்றுமையாக அந்தப் புனித கைங்கரியத்தில் பங்குபற்றுகின்றார்கள் என்றால் அதற்கு ஒரு விஷேட காரணம் இருக்கவேண்டும். ஆம்! அது தான் சந்நிதியான்மீது அந்தப் பூசகர்கள் வைத்துள்ள ஆழமான அன்பும் அசைக்க முடியாத நம்பிக்கையுமாகும்.

ஆம்! இத்தகைய ஒரு ஆழமான பக்தியும் இறுக்கமான தொடர்பும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனுக்கும் அந்த ஆலயப்பூசகர்களுக்கும் மருதர் கதிர்காமர் காலம் தொடக்கம் இருந்துவருவதை நாம் காணமுடிகிறது. உண்மையில் இந்தப் பூசகர்களது வாழ்க்கையிலும் அவர்களது அன்றாட செயற்பாடுகளிலும் அவர்களது குலதெய்வமான சந்நிதியான் என்ற கதாபாத்திரமே கருப்பொருளாக அமைந்திருக்கும். இவ்வாறான செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே மூத்த பூசகர் ஆறுமுகசாமி ஐயர் வீட்டிலும் சந்நிதி முருகன் அந்தத் திருவிளையாடலை நிகழ்த்தியிருந்தான். (தொடரும்....

## அன்னைக்கு நலம் வேண்டி ஆற்றங்கரையானிடம் வேண்டுதல்...

தெய்வத் திருமகள் துர்க்கா துரந்தரி
தேகநலம் பெற வணங்குகின்றோம்
வையம் என்றும் வாழ்த்திப் போற்றிட
வருவாய் எழுந்து முருகா அருள்வாய்

*கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்*

தேகநலம் குன்றி இருக்கும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பூரண நலம்வேண்டி சந்நிதியானை வேண்டுதல் செய்கின்றோம்.

*சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை*

**பேசாமல் இருந்தால் மூடனும் அறிவாளி என்று பிறரால் எண்ணப்படுகின்றான்.**

உ

# ஆச்சிரமத்தால்

# 22.02.2008 தொடக்கம் 28.03.2008 வரை

# மேற்கொள்ளப்பட்ட சமூகப் பணிகள்

***22.02.2008 வெள்ளிக்கிழமை***

- துன்னாலை தெற்கு அரசினர் த.க பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிக்குரிய பரிசுப்பொருட்கள் வழங்கியமை.
- யாழ் கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலய மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிக்குரிய பரிசுப்பொருட்கள் வழங்கியமை.

***29.02.2008 வெள்ளிக்கிழமை***

- பார்வைக் குறைபாடுடைய பொலிகண்டியைச் சேர்ந்த சிவக்கொழுந்து தவராசா என்பவருக்கு பெறுமதிமிக்க கண்ணாடி வழங்கப்பட்டது.

***28.03.2008 வெள்ளிக்கிழமை***

- உடல்நலக்குறைவு காரணமாக வைத்திய சிகிச்சை செய்யும் முகமாக ரூபா 10,000/= வலிகாமத்தைச் சேர்ந்த செல்லன் தேவராசா என்பவருக்கு வழங்கப்பட்டது.
- சண்டிலிப்பாய் முதியோர் சங்க வளர்ச்சிக்காக மாதாந்த உதவி வழங்கியமை.
- தொண்டைமானாறு வீ.ம வித்தியாலய மாணவன் ம. பிரசாந் என்பவருக்கு அவரது கல்விச் செயற்பாட்டிற்கு துவிச்சக்கரவண்டி கையளிக்கப்பட்டது.

தமிழக திருக்கோயில் வரிசை:

# திருஉத்தரகோசமங்கை

மதுரை- இராமநாதபுரம் நெடுஞ் சாலையில், இராமநாதபுரத்துக்கு 10 கி.மீ முன்பாக, வலதுபுறமாக பிரிந்து செல்லும் தூத்துக்குடி- திருச்செந்தூர் சாலையில் 7கி.மீ தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். சாலை பிரியும் இடத்தில் கோயில் பெயர்ப் பலகை உள்ளது. ஊருக்கு அண்மையில் செல்லும்போதே உயர்ந்த கோபுரம் தெரிகிறது.

உத்தரம்- உபதேசம், கோசம்- ரகசியம், மங்கை- பார்வதி. பார்வதி தேவிக்கு இறைவன் வேதாகமங்களின் ரகசியத்தை உபதேசித்தமையால் உத்தரகோச மங்கை எனப்பெயர் பெற்றது. மாணிக்கவாசகருக்கு இறைவன் உருவக்காட்சி தந்த இடம்.

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்துள் இத்தலத்தையும் பெருமானையும், ''அணிபொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே" என்றும், "வெறிவாய் அறுகால் உழுகின்ற பூம்பொழில் உத்தர கோச மங்கைக்கு அரசே" என்றும் "பக்தரெல்லாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும் உத்தரகோச மங்கையூர்" என்றும் திருவாசகத்தின் 38 இடங்களில் புகழ்ந்து பாடுகிறார்.

கீர்த்தித் திருவகவலில் "உத்தர கோசமங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பும்" என்று வரும் தொடர் இத் தலபுராணத்தில் ஆயிரம் முனிவர்களுக்கு இறைவன் தன் வடிவம் காட்டி காட்சி தந்த வரலாற்றைக் குறிப்பதாக சொல்லப்படுகிறது. "நீத்தல் விண்ணப்பம்" என்னும் திருவாசகப் பகுதி இத் தலத்திலேயே மாணிக்கவாசகரினால் அருளப்பெற்றது.

இராமேஸ்வரம், உத்தரகோச மங்கை ஆகிய இரு கோயில்களும் முதலில் இலங்கையில் இருந்த கண்டி மகாராஜாவினால் கட்டப்பட்டு, பின்பு பலராலும் திருப்பணிகள் செய்யப்பட்டு, பின்னரே இராமநாதபுரம் ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிகிறது. இன்றுவரை இராமநாதபுரம் சமஸ்தான ஆளுகைக்கு உட்பட்டதாகவே இருந்து வருகிறது.

பழமையான இத் திருக்கோயில் முகப்பில் இரு கோபுரங்கள் உள்ளன. வலதுபக்க கோபுரம் ஏழு நிலைகள் கொண்ட, கலசங்கள் இல்லாத செங்கல் கட்டமைப்பு கொண்டது. இடதுபக்கம் உள்ளது மொட்டைக் கோபுரமாகக் காட்சி தருகிறது. இரண்டு வெளிக் கோபுரங்களுக்கும் உள் கோபுரங்கள் உள்ளன.

கோபுரங்களைத் தாண்டி உள்ளே சென்றால் விநாயகர், சுப்பிரமணியரையும், பலிபீடம், கொடிமரம், நந்தி இவற்றையும் வணங்கியவாறு உள்ளே போனால் நேராக மூலவர் தரிசனம் கிடைக்கிறது. உள்ளே கருவறையில் மகேஸ்வரர்- மங்களநாதர் மங்களமாகக் காட்சி தருகிறார். சதுர ஆவுடையார் பகுதி. அடுத்து மங்களேஸ்வரி- மங்களாம்பிகை தரிசனம். அம்பிகை நான்கு கரங்களுடன் அருள் பாலிக்கிறார். பிரகாரத்தின் அழகு இராமேஸ்வரத்தை நினைவூட்டுவதாகவே உள்ளது. பிரகாரச்

சுவரில் திருவாசகப் பகுதிகளான பொன்னூஞ்சல், நீத்தல் விண்ணப்பம் முதலியவை சலவைக் கல்லில் பொறித்துக் காணப்படுகிறது.

கோயிலுக்கு உள்ளே குளத்தின் எதிரில் ஆதி சிதம்பரம் எனப்படும் அற்புதத் தனிக்கோயிலினுள் நடராஜப் பெருமான் காட்சி தருகிறார். "ஆதிசிதம்பரேசர்" என்று பெருமான் அழைக்கப்படுவதுடன், இந்த மண்டபமானது "இரத்தின சபை" எனப்படுகிறது. சுற்றிலும் அகழி அமைப்பாக இருப்பதால், உட்செல்ல மரப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கூத்தபிரான்- நடராஜர் அதி அற்புதமானவர். ஐந்தரை அடி உயரம்- முழுவதும் மரகதத் திருமேனி. இப்பெருமான் ஆண்டுமுழுவதும் சந்தனக்காப்பிலேயே காட்சியளிப்பார். வருடத்தில் ஒருமுறை மார்கழித் திருவாதிரை அன்று மிகப்பெரிய அபிஷேகத்துடன் சந்தனக் காப்பு கலைக்கப்படும். அன்று முழுவதும் சந்தனக்காப்பில் இல்லாத நடராஜரைத் தரிசிக்க கூட்டம் அலைமோதும். இரவு மீண்டும் சந்தனக்காப்பிடப்படும்.

இப்பெருமான் திருமேனியை உள்வைத்தே சந்நிதி கட்டப்பட்டுள்ளதால் திருமேனியை வெளிக்கொணர முடியாது. (உலாவருவதற்கான மூர்த்தம் தனியே உள்ளது) இந்த விக்கிரகம் ஒலி, ஒளி அதிர்வுகளை தாங்கமுடியாத தன்மைகொண்டதால், இங்கு மேளதாள வாத்தியங்கள் வாசிப்பதில்லை.

முன் மண்டபத்தில் ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் செய்கிறார்கள். அங்கிருந்து வலதுபக்கம் மாணிக்கவாசகரையும், இடது பக்கமாக உமாமகேஸ்வரரையும் ஒருசேர தரிசிக்கலாம்.

பிரகாரத்தை வலம்வரும்போது குருந்தமர உபதேசக் காட்சியும், இறைவன் அமர்ந்திருக்க மாணிக்கவாசகர் உபதேசம் கேட்கும் காட்சியும் அற்புதமானவை.

நடராஜப் பெருமான் கோயிலின் முன் மண்டபத்தில் வண்ண ஓவியமாக உள்ள வரலாற்றில் இராவணன் மனைவி மண்டோதரியின் பெயர் பல இடங்களில் வருவதை அவதானிக்கலாம்.

சித்திரைப் பௌர்ணமி, மார்கழித் திருவாதிரை நாட்கள் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மாணிக்கவாசகர் திருவடிதோய்ந்த இடத்தைத் தொட்டு வணங்கி நிறைந்த மனதோடு வெளியே வருகிறோம்.

பி.கு: மதுரை- இராமநாதபுரம் இடங்களிலிருந்து நேரடியான பேருந்து வசதியுண்டு.

"கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே"

- திருவாசகம். நீத்தல் விண்ணப்பம்-

---

சான்றோர் தாம் துன்புற நேர்ந்தாலும் பிறரைத் துன்புறுத்தமாட்டார்கள். இராகுவால் தீண்டப்பட்ட சூரியன் உலகினரைக் கலங்கச் செய்வதில்லை.

---

**அவனவனுக்கு உரியதை அவனவனுக்கு வழங்குவதுதான் நீதி.**

உ

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

06-06-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:-** "பக்தி இசை"

**வழங்குபவர்:-** செல்வி குணராஜா சிவானுஜா

(வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

---

13-06-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "ஆ"

**வழங்குபவர்:-** சைவப்புலவர் பொன் சுகந்தன் அவர்கள்

(சைவப் பிரசார அமைச்சர்)

---

20-06-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "பெரியபுராணம்" (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

27-06-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 126ஆவது மாத வெளியீடு

## ஆனி – 2008

வெளியீட்டுரை:- திரு பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வை மணி) அவர்கள்

மதிப்பீட்டுரை:- திரு க. நவரெத்தினம் அவர்கள் (ஆசிரியர்)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

**சுபமங்களம்**
**நன்றி**